# தமிழ் சொல்
TAMIL SOUL

Volume : 1 | Issue : 6 | September 2024 | Chennai | Pages : 8 | Price : 8.00 | (Tamil Monthly)

மலர் : 1 | இதழ் : 6 | செப்டம்பர் 2024 | சென்னை | பக்கம் : 8 | விலை : ரூ.8.00 | (தமிழ் மாத இதழ்)


# இந்திய விளையாட்டுத் துறை வளர்ச்சியின் முன்னோடியாக தமிழ்நாடு விளங்குகிறது

## சென்னையில் நடைபெற்ற ஃபார்முலா 4 போட்டி குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

இந்திய விளையாட்டுத் துறை வளர்ச்சி யின் முன் னோடியாக தமிழ்நாடு விளங்கு கிறது என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பெருமை யுடன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் மிக பிரம் மாண்டமாக இரவு நேர பார் முலா 4 ஸ்ட்ரீட் சர்க்யூட் போட்டிகள் இரண்டு நாட்கள் வெற்றி கரமாக நடந்து முடிந் துள்ளது. ஆகஸ்ட் 31 ஆம் தேதி பார்முலா 4 ஸ்ட்ரீட் சர்க்யூட் போட்டிகளை அமைச்சர் உதய நிதி ஸ்டாலின் கொடிய சைத்து தொடங்கி வைத் தார். இதனைத் தொடர்ந்து பயிற்சிப் போட்டி கள், தகுதி சுற்றுப்போட்டிகள் நடைபெற்றது. இந்தியன் ரேசிங் லீக் மற்றும் ஜேகே எஃப்எல் ஜிபி 4 என மூன்று வகை போட்டிகளில் பிரதான சுற்று போட்டிகள் நடைபெற்றது.

பார்முலா இந்தியன் ரேஸில் இரண்டா வது பந்தயத்தில் வெற்றி பெற்றவர்களுக்கு விளையாட் டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், ஹைத ராபாத் அணியின் உரிமை யாளரும், நடிகருமான நாக சைதன்யா ஆகி யோர் பரிசுகளை வழங் கினர். இதில் ஆப்பிரிக் காவை சேர்ந்த ஹைத ராபாத் அணியின் அலி பாய் முதலிடத்தையும், அகமதாபார் அணி யின் திவி நந்தன் இரண்டா வது இடத்தையும், ஜேடன் பாரியர்ட் மூன்றாவது இடத்தையும் பெற்றனர். சென்னையில் ஃபார் முலா 4 கார் பந்தய போட்டிக்கு சினிமா நட்





சத்திரங்கள் முதல் பொதுமக்கள் வரை அனை வரும் அர சுக்கு பாராட்டு தெரிவித்துள்ளனர். குறிப்பாக விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு இப்படி ஒரு போட்டியை காண ஏற்பாடு செய்ததற்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இந்தியாவின் விளையாட் டுத் தலைநகரம் தமிழ்நாடு எனும் பெருமையை உறுதியாகத் தக்கவைப்போம் என முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளி யிட்டுள்ள சமூகவலைதள பதிவில், "'பார்முலா 4 சென்னை' கார் பந்தயத்தை மாபெரும் வெற்றியடையச் செய்த உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், தமிழ் நாடு விளையாட்டு மேம் பாட்டு ஆணையத்தைச் சேர்ந்த அனைவருக் கும் எனது பாராட்டுகள். செஸ் ஒலிம்பியாட், சென்னை ஓபன் 2023 டென் னிஸ் தொடர், ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பி யன்ஸ் டிராபி 2023, பன்னாட்டு அலைச்சறுக்குப் போட்டி 2023, ஸ்குவாஷ் உலகக் கோப்பை 2023 மற்றும் கேலோ இந்தியா 2023 ஆகியவற்றின் வெற்றிகளைத் தொடர்ந்து, தமிழ்நாடு விளை யாட்டு மேம்பாட்டுக்கான சிறப்பான வளர்ச்சிப் பாதையை அமைத்து வருகிறது.

உலகத் தரத்திலான வசதிகள், உத்தி மிகுந்த முதலீடுகள் ஆகியவற்றின் வாயிலாக நாம் வெறுமனே தொடர்களை மட்டும் நடத்திக் காட்டவில்லை, இந்திய விளை யாட்டுத்துறை வளர்ச்சியின் முன்னோடியாக விளங்கி வருகி றோம். அதனால்தான் இந்திய ஒலிம்பிக் அணியி லும் தமிழ்நாடு தனிச்சிறப் பான இடத்தைப் பெற்றுள்ளது. எல்லைகளைத் தொடர்ந்து விரிவ டையச் செய்வோம், 'இந்தியாவின் விளை யாட்டுத் தலைநகரம் தமிழ்நாடு' எனும் பெரு மையை உறுதியாகத் தக்கவைப்போம்" என தெரிவித்துள்ளார்.

# இந்தியாவில் முதலீடு செய்ய முன்வர வேண்டும்!

## சிங்கப்பூர் தொழிலதிபர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு!

இந்தியாவில் அதிக வளர்ச்சிக்கு வாய்ப்புள்ள விமானப் போக்குவரத்து, உள் கட்டமைப்பு போன்ற துறையில் முதலீடு செய்ய முன் வரவேண் டும் என சிங்கப்பூர் பெரும் தொழிலதிபர்க ளுக்கு பிரதமர்நரேந்திர மோடி அழைப்பு விடுத் தார்.

சிங்கப்பூரில் முன் னணி நிறுவனங்களின் தலைமைச் செயலதிகா ரிகளை சந்தித்து பிரத மர் மோடி உரையாடி னார். சிங்கப்பூர் சவரின் வெல்த் பண்ட் டெமாசெக் ஹோல் டிங்ஸ் அண்ட் ஜிஐசி, டிபிஎஸ் குழுமம், சிங்கப்பூர் ஏர்லைன்ஸ், ரெனிவபிள்ஸ் பிளே யர் செம்ப்கார்ப், சங்கி ஏர்போர்ட், சிங்டெல், எஸ்ஜிசி, கேப்பிட்டல் லேண்ட் இன்வெஸ்ட் மென்ட் உள்ளிட்ட முன்னணி நிறுவனங்க ளின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட. இந்த கூட்டத்தில் பிரதமர் மோடி பேசியதாவது:

எனது மூன்றா வது பதவிக்காலத்தில் உள்கட்டமைப்பு வளர் ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இதனால், அதன் வள ர்ச்சியும், வேகமும் மேலும் அதிகரிக்கும்.



இதனால், ரயில்வே, சாலைகள், துறை முகங்கள், விமானப் போக்குவரத்து, தொழில் பூங்காக்கள், டிஜிட்டல் இணைப்பு ஆகியவற்றில் முதலீட் டுக்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. இதனை சிங்கப்பூர் முத லீட்டாளர்கள் திற மையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

கடந்த 10 ஆண் டுகளில் இந்தியா வியக் கத்தக்க அளவில் முன் னேற்றங்களை அடைந் துள்ளது. அரசியல் ஸ்திரத்தன்மை, கொள்கை முன் கணிப்பு, வணிகம் செய் வதை எளிமையாக்கு வதற்கான சீர்திருத்தங் கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. திறமை யான பணியாளர் குழு, விரிவான சந்தை வாய் ப்பு, உலக பொருளா தார வளர்ச்சிக்கு 17 சதவீத பங்களிப்பை வழங்கும் இந்தியாவில் முதலீடு செய்வது என்பது எதிர்கால முன்னேற்றத்துக்கான அடிப்படை. விமான சந்தையில் பரந்து விரிந்த வானத்தைப் போல் ஏராளமான முதலீட்டு வாய்ப்புகள் குவிந்து கிடக்கின்றன. சாதாரண ஸ்கிராப்பிங் தொழில் கூட பெரிய முதலீட்டுக்கான வாய்ப்புகளை அளிக்கி றது. குறிப்பாக, பழைய அரசு வாகனங்கள் அனைத்தையும் அழிக்க திட்டங்கள் உருவாக் கப்பட்டுள்ளன. சிங்கப் பூரில் உள்ள தொழில திபர்களுக்கு முதலீட்டு நடவடிக்கைகளை இல குவாக்க ஏதுவாக இன் வெஸ்ட் இந்தியா அலு வலகம் இங்கு திறக் கப்படும். இவ்வாறு பிரதமர் மோடி பேசி னார்.

சிங்கப்பூரின் முத லீட்டு நிதியம், உள் கட்டமைப்பு, தயாரிப்பு, எரிசக்தி, லாஜிஸ்டிக் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சிஇஓக்கள் பிரதமர் மோடியுடன் வட்டமேசை விவாதத் தில் கலந்து கொண்ட னர். இந்த கூட்டத்தின் முடிவில் அடுத்த சில ஆண்டுகளில் இந்தி யாவில் ரூ.5 லட்சம் கோடியை (60பில்லியன் அமெரிக்க டாலர்) முதலீடு செய்வதாக பிரதமர் மோடியிடம் அவர்கள் உறுதியளித்த னர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில், சிகாகோவில் லிங்கன் எலக்ட்ரிக் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 500 கோடி ரூபாய் முதலீட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில், விஷய் பிரிஷிஷன் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 100 கோடி ரூபாய் முதலீட்டில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

# 40 சதவீத மாணவர்கள் கல்லூரியில் சேரவில்லை!

## தரவுகளின் அடிப்படையில் வெளியான அதிர்ச்சி தகவல்!

"தமிழ்நாட்டில் குக்கிராமத்தில் வசிக்கும் ஒரு மாணவர் பிளஸ் 2 முடித்த பின்னர், எந்தக் கல்லூரியில் சேர்ந்தார் என்பதை எவ்வாறு கண்டறிவது?" என்று கல்வி அதிகாரிகளிடம் கேட்டால், "யுமிஸ்" (UMIS) எனப் பதில் வரும்.



**அதென்ன யுமிஸ்?**

பள்ளிக்கல்வியில் சேரும்போது ஒவ்வொரு மாணவருக்கும் எமிஸ் (EMIS - Educational Management Information System) என்ற எண் கொடுக்கப்படுகிறது. அந்த மாணவர் உயர்கல்வியில் சேரும்போது சம்பந்தப்பட்ட கல்லூரி நிர்வாகம், அரசின் யுமிஸ் (University Managment Information System) செயலியில் அதைப் பதிவிட வேண்டும்.

அவ்வாறு பதிவான தரவுகளின்படி, தற்போது வரை சென்னையில் 40% மாணவர்கள் உயர்கல்வியில் சேரவில்லை எனக் கூறப்படுகிறது.

தற்போதுவரை, சென்னையில் ஐந்து மாணவர்களில் இரண்டு பேர் உயர்கல்வியில் சேராமல் இருப்பதாக, கல்வித்துறையின் தகவல் மைய அதிகாரி ஒருவர் பிபிசி தமிழிடம் தெரிவித்தார்.

இதில், பிளஸ் 2 முடித்த 16,061 பேரில் 6,584 பேர் எந்தவிதமான உயர்கல்வி படிப்பிலும் சேரவில்லை. இந்த 6,584 பேரில் 958 பேர் மட்டும் தற்போது உயர் கல்விக்காக விண்ணப்பித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

"இது தற்போது வரையிலான தரவுகள்தான். மருத்துவம், பொறியியல் படிப்புகளில் மாணவர் சேர்க்கை நிறைவடைந்த பின்னர் மேலதிகத் தகவல்கள் கிடைக்கும்," எனக் குறிப்பிடுகிறார் கல்வித்துறையின் தகவல் மைய அதிகாரி ஒருவர். இதோடு, கடந்த ஆண்டு உயர்கல்வியில் இணைந்த மாணவர்களின் விவரங்களை துறையின் உயர் அதிகாரி பகிர்ந்துகொண்டார்.

**கல்லூரியில் சேராத 1.50 லட்சம் பேர்?**

அதன்படி, 2022—2023—ஆம் கல்வியாண்டின் தரவுகளைப் பார்த்தாலும், தமிழ்நாடு முழுக்க கிட்டத்தட்ட 40% மாணவர்கள், பள்ளிப் படிப்பை முடித்தவுடன் கல்லூரியில் சேரவில்லை எனத் தெரிகிறது.

யுமிஸ் மூலமாக பதிவு செய்யப்பட்ட தரவுகளின் படி தமிழ்நாட்டில் 2022—23 கல்வி ஆண்டில் 3,97,809 மாணவர்களில் 2,39,270 பேர் மட்டும் உயர் கல்வியில் இணைந்துள்ளனர். அரசின் எமிஸ் மற்றும் யுமிஸ் செயலி வாயிலாக இது தெரிய வந்துள்ளது. இதில், "1,13,099 மாணவர்கள் உயர் கல்விக்காக விண்ணப்பிக்காமல் இருக்க வேண்டும் அல்லது அதுகுறித்த போதிய தரவுகளோ தங்களிடம் இல்லை," என தகவல் மைய அதிகாரி குறிப்பிட்டார்.



"முன்பெல்லாம் பிளஸ் 2 முடித்தால் எதாவது ஒரு வகையில் பட்டம் பெற்றுவிடலாம் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால், 2017—க்குப் பிறகு நிலைமை முற்றிலும் மாறிவிட்டது," என்கிறார், பொதுப் பள்ளிகளுக்கான மாநில மேடை அமைப்பின் பொதுச்செயலர் பிரின்ஸ் கஜேந்திரபாபு.

"கடந்த 2017—ஆம் ஆண்டில் நீட் தேர்வும் பல்கலைக்கழக பொதுநுழைவுத் தேர்வும் வந்தன. தற்போது மத்திய பல்கலைக் கழகத்தில் சேர நுழைவுத் தேர்வு உள்ளது. தேசிய கல்விக் கொள்கையை அனைத்து மாநிலங்களும் ஏற்கும்போது இவை பரவலாக்கப்படும். இதுபோன்ற தேர்வுகள் கல்வியின் மீதுள்ள நம்பிக்கையை இழக்க வைக்கின்றன," என்கிறார் அவர்.

பள்ளியில் மாணவர் பெறும் மதிப்பெண்ணை, உயர்கல்விச் சேர்க்கைக்கு எடுத்துக் கொள்ளாமல் வேறொரு தேர்வு நடைமுறையைப் பின்பற்ற வேண்டும் எனக் கூறுவது நெருக்கடியைக் கொடுப்பதாகக் கூறுகிறார் பிரின்ஸ் கஜேந்திரபாபு.

மேலும், "நுழைவுத் தேர்வுகளை மையப்படுத்தியே அனைத்தும் இருப்பதால் பிளஸ் 2 வகுப்பில் பாடப்பிரிவை தேர்வு செய்வதில் மாணவர்கள் குழப்பம் அடைகின்றனர். அதுதான், இதுபோன்ற பிரச்னைகளுக்கும் அடிப்படையாக அமைகிறது," என்கிறார் அவர்.

சென்னையின் சூழல் குறித்து விவரித்தவர், "காசிமேடு, நொச்சிக்குப்பம், என அனைத்தும் சேர்ந்ததுதான் சென்னை. அங்குள்ள சூழல்களைக் கவனித்தால் மாணவர்களின் நிலையை உணர முடியும். சமூகத்தில் ஒடுக்குமுறை, பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலை, நுழைவுத் தேர்வுகள், அரசுக் கல்லூரி, அரசுப் பல்கலைக்கழகங்களில் சுயநிதிப் பாடப் பிரிவுகள் என அனைத்தும் வணிகமயமாகிவிட்டன. இதனால் உயர்கல்வியை நோக்கி ஏழை மாணவர்கள் நகர முடியாத சூழல் ஏற்படுகிறது. குடும்பச் சூழல்களைச் சமாளிக்க வேலைக்குச் செல்லும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்" என்கிறார் அவர்.

**400 பேருக்கு ஓர் ஆசிரியரா?**

ஆசிரியர் மாணவர் விகிதாச்சாரத்தில் பற்றாக்குறை நிலவுவதை முக்கியக் காரணமாகக் கூறும் பிரின்ஸ் கஜேந்திரபாபு, "பிளஸ் 2 வகுப்பில் 400 மாணவர்களுக்கு ஒரு தமிழ் ஆசிரியர் என்ற நிலை உள்ளது. 240 பேருக்கு ஒரு இயற்பியல் ஆசிரியர் இருக்கிறார். ஆய்வகங்களையும் அவரே கவனிக்க வேண்டிய நிலை உள்ளது. இதனால், 80 சதவீதத்துக்கும் மேல் தேர்ச்சி யைக் கொடுக்க முடிவதில்லை. மாணவர்களும் குறைந்த மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெறுகின்றனர். இந்த மதிப்பெண்ணுக்கு உயர்கல்வி நிறுவனங்களில் சீட் கிடைப்பதில்லை," என்று விவரித்தார்.

அதேநேரம், கடந்த கல்வி ஆண்டில் பிளஸ் 2 தேர்ச்சிக்குப் பிறகு உயர்கல்வியைத் தொடர இயலாத மாணவர்களின் பின்னணியைக் கண்டறியும் முயற்சியில் பள்ளிக்கல்வித்துறை ஆர்வம் செலுத்தியது. இதில், குடும்பச் சூழல், உயர்கல்வியில் ஆர்வமின்மை, பெற்றோர் படிக்க அனுமதிக்காதது, வேலைக்குச் செல்வது, விரும்பிய பாடப் பிரிவில் சேர்க்கை கிடைக்காதது உள்படப் பல காரணங்களை மாணவர்கள் தரப்பில் முன்வைத்துள்ளனர்.

இதையடுத்து, ஒவ்வொரு மாவட்டத்திலும் உயர்கல்வியில் இணையாத மாணவர்களைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சியர்களுக்குப் பள்ளிக்கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது.

இதற்கான குழுவில், மாவட்ட ஆட்சியர், திறன் மேம்பாட்டுக் கழக அதிகாரிகள், சுகாதார அதிகாரிகள், உயர்கல்வித்துறை அதிகாரிகள் ஆகியோர் உள்ளனர். இக்குழுவினர் வாயிலாகப் பல மாவட்டங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பள்ளிக்கல்வித்துறை அதிகாரிகள் கூறுகின்றனர்.

**'அதிகரித்த உயர்கல்விச் செலவு'**

உதாரணமாக, விருதுநகர் மாவட்டத்தில், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 2023—24—ஆம் கல்வியாண்டில் பிளஸ் 2 வகுப்பில் 17,448 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இவர்களில் 17,198 பேர் (98.6%) உயர்கல்விக்குச் செல்ல உள்ளதாக மாவட்ட ஆட்சியர் வி.பி.ஜெயசீலன் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இதில், மீதம் உள்ள 308 மாணவர்களை உயர்கல்வியில் சேர்க்கும் வகையில் மாவட்ட நிர்வாகத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால், உயர்கல்விக்கான செலவு அதிகரித்துவிட்டதே மாணவர்கள் சேர்க்கை குறையக் காரணம் என்கிறார் கல்வியாளர் நெடுஞ்செழியன்.

"பிளஸ் 2 முடித்த பிறகு உயர்கல்வி சேரும்போது விண்ணப்பப் படிவத்தின் விலையே ஏழை மாணவர்களுக்கு எட்டாத ஒன்றாக உள்ளது. ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கச் சொல்கின்றனர். கிராமங்களில் பலரின் வீடுகளில் இணையதள வசதிகள் இல்லை. உயர்கல்வி பயில வரும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு அனைத்தையும் அரசு இலவசமாகக் கொடுக்க வேண்டும்," என்கிறார் கல்வியாளர் நெடுஞ்செழியன்.



"நீட் தேர்வு விண்ணப்பக் கட்டணத்தை ஓ.பி.சி பிரிவினர் 1,400 ரூபாய் செலுத்தி வாங்க வேண்டும். பொறியியல் கலந்தாய்வுக்கு 500 ரூபாய் விண்ணப்பக் கட்டணமாக வாங்குகின்றனர். மத்திய பல்கலைக்கழகங்களில் விண்ணப்பிக்கலாம் என்பதே தமிழக மாணவர்களுக்குத் தெரிவதில்லை. கல்வியை அதிக செலவீனம் உள்ளதாக மாற்றியதுதான், உயர்கல்வியில் சேர்க்கை குறையக் காரணம்," என்கிறார் அவர்.

"மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்னை குறித்து, பள்ளிக்கல்வித்துறை அதிகாரிகளிடம் கூறினால், அதை எங்களின் சொந்தப் பிரச்னையாகப் பார்க்கின்றனர். அடிப்படைப் பிரச்னைகளை ஆராயாமல் முழுமையான தீர்வைத் தருவது கடினம்," என்கிறார் பிரின்ஸ் கஜேந்திரபாபு.

**பள்ளிக்கல்வித்துறை செயலர் சொல்வது என்ன?**

இது குறித்துப் பேசிய பள்ளிக்கல்வித் துறைச்செயலர் மதுமதி, "தலைமை ஆசிரியர்கள் மூலமாக மாணவர்களைக் கண்காணிக்கிறோம். அவர்களுக்குப் படிப்பதில் ஆர்வம் இருக்கிறதா அல்லது திறன் மேம்பாட்டுப் பயிற்சியில் ஆர்வம் உள்ளதா என்பதை அறிந்து வேலைக்கு ஏற்பாடு செய்து தருகிறோம்," என்கிறார்.

"மாணவர்கள் உயர்கல்வி படிக்க விரும்பினால், அவர்களது மதிப்பெண் குறைவாக இருக்கும் பட்சத்தில் மீண்டும் மறுதேர்வு எழுத ஏற்பாடு செய்யப்படுகிறது. அவர்கள் கல்லூரிகள் அல்லது தொழிற்கல்வியில் படிப்பதற்கு ஏற்பாடு செய்கிறோம்.

"பிளஸ் 2 படிக்கும் மாணவர்களை செப்டம்பர், அக்டோபரில் இருந்தே தலைமை ஆசிரியர்கள் கவனிக்கத் தொடங்குகின்றனர். மாணவர் எத்தனை நாள் பள்ளிக்கு வருகிறார், எந்தப் பாடத்தில் ஆர்வம் குறைவு என்பதை முன்கூட்டியே கணிக்கின்றனர்," என்கிறார்.

சென்னையில் உயர்கல்வி சேர்க்கை குறைவு குறித்துப் பேசிய மதுமதி ஐ.ஏ.எஸ், "யுமிஸ் செயலி கடந்த ஆண்டு முதல் முழுமையாகச் செயல்படத் தொடங்கியுள்ளது. நடப்பு கல்வி ஆண்டில் மருத்துவம், பொறியியல் படிப்பு சேர்க்கை முடியும் போது, முழு விவரங்களும் தெரிய வரும்," எனக் குறிப்பிட்டடார்.

மேலும், "சூழல் என்பது மிக முக்கியமான ஒன்று. ஆனால், அதை மட்டுமே காரணமாகக் கூற முடியாது. முதல் தலைமுறை பட்டதாரிகளாக எத்தனையோ பேர் வருகின்றனர். உயர் கல்வியில் இணைய முடியாமல் போவதற்கான காரணங்களைச் சரிசெய்யும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன," என்றார்.

"இந்தியாவில் உயர்கல்வி விகிதாரச்சாரம் என்பது 28.3 சதவீதமாக உள்ளது. தமிழ்நாடு 47 சதவீதம் என்பதில் இருந்து குறைந்து வருகிறது. மாணவர்களுக்குப் பல்வேறு நிலைகளில் அரசின் தொடர்ச்சியான ஆதரவு தேவைப்படுகிறது. அது கிடைக்கும் போதுதான் உயர்கல்வியை நோக்கி அவர்களை ஈர்க்க முடியும்," என்கிறார் கல்வியாளர் நெடுஞ்செழியன்.

# உயர் கல்வியில் சேராத 2.82 லட்சம் மாணவர்கள்

தமிழகத்தில் கடந்த 2 ஆண்டுகளில் உயர் கல்வியில் சேராத 2.82 லட்சம் மாணவர் களை, நான் முதல்வன் உயர்வுக்குப்படி திட்டம் மூலம் கல்வி நிறுவனங்களில் 100 சதவீத சேர்க்கையை உறுதி செய்யவேண்டும் என்று மாவட்ட ஆட்சியர்களுக்கு தலைமைச் செயலர் நா.முருகானந்தம் அறிவுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து, ஆட்சியர்களுக்கு அவர் எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது: "தமிழ கத்தில் பிளஸ் 2 தேர்வுக்கு செல்லாமல் தோல்வியடைந்த, அல்லது தேர்ச்சி பெற்று உயர்கல் விக்கு விண்ணப்பிக்காத மாணவ, மாணவியருக்கு நான் முதல்வன் திட்டத்தின் கீழ் உயர்வுக்குப் படி—2024 என்ற திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. கடந்த 2023 மற்றும் 24 ஆண்டுகளில் 2.47 லட்சம் மாணவர்கள் உயர்கல்விக்கு விண்ணப்பிக்கவோ, சரியான தகவல்களை தரவோ இல்லை. இவர்களின் உயர்கல்வியை உறுதி செய்ய, அனைத்து மாவட்டங்களிலும் 94 வட்டாரங்களில் நான் முதல்வன் உயர்வுக்குப்படி என்ற திட்டத்தை செயல்படுத்த உள்ளோம்.



பொதுவாக, கல்லூரிகளில் சேர முடியாததற்கு, உயர் கல்வி பற்றிய சரியான தகவல் கிடைக்காதது, திருமணம், வேலை அல்லது இவற்றுக்கு திட்டமிடுவது, பெற்றோரின் விருப்பமின்மை காரணமாக இருக்கலாம். இதுதவிர உடல் நலன் பாதிப்பு, சிறப்பு கவனம் தேவைப்படுவது, கல்வி இடத்தின் தூரம், கல்லூரி செல்ல பயம், பெற்றோர், பாதுகாவலர் இல்லாமை, கட்டணம் செலுத்த முடியாதது, விரும்பிய பாடப்பிரிவு கிடைக்காதது உள்ளிட்ட காரணங்களும் இருக்கலாம்.

இந்த காரணங்கள் இருந்தால், அவர்க ளுக்கு மாற்று வாய்ப்புகள் இருப்பதை தெரி வித்து, தடைகளை மாற்ற வேண்டும். வங்கிக் கடன், வேலை செய்து கொண்டே படிக்கும் வசதிகள், உதவித்தொகை உள்ளிட்ட வாய்ப்புகள் குறித்து தெரிவிக்க வேண்டும். இத்திட்டத்தை செயல்படுத்த, மாவட்ட ஆட்சியர் அரசு அலுவலர்களை ஒருங்கிணைக்க வேண்டும். சார் ஆட்சியர் அல்லது மாவட்ட வருவாய் அலுவலரை பொறுப்பு அதிகாரியாக நியமிக்க வேண்டும். முகாம்கள் நடத்தி, அவர் களுக்கு தேவையான சான்றிதழ் களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், கடந்த 3 ஆண்டுகளில், பள்ளி, கல்லூரி இடை நின்றவர்கள், தேர்ச்சி பெற்ற பின்பும் உயர்கல்வியில் சேராதவர்கள் பற்றிய தகவல்களை சேகரிக்க வேண்டும். நிரப்பப் படாத காலியிடங்களை கண்டறிந்து அவர் களை 100 சதவீதம் உயர்கல்வியில் சேர்வதை உறுதி செய்ய வேண்டும். இதற்கு பிறகும் உயர் கல்வியில் சேராத மாணவர்களுக்கு குறுகிய கால திறன் பயிற்சி, பள்ளிக்கல்வியை முடிப் பது ஆகியவற்றை உறுதி செய்ய வேண்டும்.

அனைத்து எஸ்சி, எஸ்டி மாணவர்க ளுக்கு உதவித்தொகை, தங்குமிடம் கிடைப்ப தையும் உறுதிசெய்ய வேண்டும். 3 கட்ட முகாம்கள் நடத்தி அனைத்து அரசு, அரசு உதவி பெறும் கல்லூரிகளும் பங்கேற்க செய்ய வேண்டும். இதுதவிர, பொறுப்பு அதிகாரிகள் தங்களுக்கு வகுக்கப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ள வேண்டும். ஆட்சியர்கள் முகாம் களை தொடங்கி வைக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

மேலும் மாணவர்களின் இல்லங்களுக்கு நேரடியாகச் சென்று உயர்வுக்குப்படி முகாம் தொடர்பான விவரங்களையும், உயர்கல்வியில் சேருவதற்கான விழிப்புணர்வு, வழிகாட்டுதல்களையும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்த கட்டமாக உயர்கல்வி வழிகாட்டி குழு உறுப்பினர்கள், பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள், முன்னாள் மாணவர்கள் ஆகியோர் மாணவர்களின் இல்லங்களுக்குச் சென்று வழிகாட்டுதல்களை வழங்கவுள்ள னர்" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோவை, திருப்பூரில் வங்கதேச அகதிகள் ஊடுருவலா?



அசாம் முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா சமீபத்தில் அளித்த பேட்டியில், தமிழகத்திலுள்ள கோவை நகரைக் குறிவைத்து வங்கதேச அகதிகள் ஊடுருவுகிறார்கள் என்று குறிப்பிட்டிருந்தார். இந்தக் கூற்று இப்போது விவாதப் பொருளாயிருக்கிறது. அவரது பேட்டியில், "வங்கதேசத்திலிருந்து ஊடுருவப்பார்த்த 50 பேரை நாங்கள் தடுத்து நிறுத்தி, திருப்பி அனுப்பியுள்ளோம். திரிபுரா காவல் துறையினரும், எல்லை பாதுகாப்புப் படையினரும் அதேபோன்று பலரைப் பிடித்துள்ளனர். அவர்களின் முதன்மை இலக்கு கோவைதான்" என்று கூறியிருந்தார்.

மேலும், "அவர்கள் இங்கிருந்து தெற்கு நோக்கிச் செல்கிறார்கள். எனவே, கோவையில் சமீபத்தில் ஜவுளித்துறை சார்ந்த பணிகளில் சேர்ந்தவர்கள் பற்றி விசாரிக்க வேண்டுமென்று தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு நான் கடிதம் எழுதவுள்ளேன். சட்டவிரோதமாக ஊடுருவி வருபவர்களில் 10% பேர்தான் சிக்குகின்றனர். வங்கதேசத்திலிருந்து இந்து மக்கள்தான் வருவார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அரசியல் அகதிகள் வரவில்லை. பொருளாதார அகதிகள்தான் வருகிறார்கள்" என்று பொதுவெளியில் பகிரங்கமாகவே எச்சரித்திருக்கிறார் அசாம் முதல்வர்.

அவருடைய பேட்டியின் காணொளி, தமிழில் 'சப் டைட்டில்' உடன் 'கோவைக்கு எச்சரிக்கை' என்று சமூக ஊடகங்களில் வேகமாக பரப்பப்பட்டுக் கொண்டிருக்கிறது.

வங்கதேசத்தில் மாணவர்கள் போராட்டத்தால், அங்கிருந்த ஆட்சி கவிழ்க்கப்பட்டு, ஓர் அசாதாரணமான சூழ்நிலை நிலவியதைத் தொடர்ந்து, அங்கிருந்து பலரும் அகதிகளாகப் புறப்பட்டு, இந்தியாவிற்குள் ஊடுருவி, தங்களுக்கு நன்கு தெரிந்த ஜவுளித்துறை சார்ந்த பணியைத் தேடிக் கொள்வதற்காக கோவையை நோக்கிச் செல்கிறார்கள் என்பதுதான் அசாம் முதல்வர் பிஸ்வா கூறியிருக்கும் கருத்தின் விளக்கமாகப் பார்க்கப்படுகிறது.

### 80 லட்சம் தொழிலாளர்களில் 40% வடமாநிலத்தவர்கள்

ஜவுளித்தொழில் என்று பார்த்தால், கோவையில் நூற்பாலைகளும், திருப்பூரில் ஆடை தயாரிப்பு நிறுவனங்களுமே அதிகளவில் இருக்கின்றன. வங்கதேசத்தில் நூற்பாலைகள் அதிகமில்லை என்பதால், அவர்களுக்கு ஆடை உற்பத்தி சார்ந்த பணிகள் மட்டுமே அதிகம் தெரியும், மில் வேலைகள் தெரியாது என்கிறார் தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ் அசோசியேஷனின் (டாஸ்மா) தலைமை ஆலோசகர் வெங்கடாசலம்.



"அசாம் முதல்வர் எந்த அர்த்தத்தில் அதைச் சொன்னார் என்று தெரியாது. ஏதாவது உளவுத்துறை தகவல் அடிப்படையில் அப்படிச் சொல்லியிருக்கலாம். பொதுவாக, கோவை என்றால் 'மான்செஸ்டர் ஆஃப் சவுத் இந்தியா' என்பார்கள். அதனை வைத்து, ஜவுளித்துறை என்றாலே கோவை என்று நினைத்து, கோவைதான் அவர்களின் இலக்கு என்று அவர் சொல்லியிருக்க வேண்டுமென்று கருதுகிறேன்," என்கிறார் அவர்.

மேலும், "நூற்பாலைகளைப் பொருத்தவரை, ஒரு தொழிலாளரைப் பணியில் சேர்ப்பதற்கு நிறைய நடைமுறைகளை நாங்கள் கடைப்பிடிக்கிறோம். எங்கள் அமைப்பில் 850 மில்களில், 80 லட்சம் தொழிலாளர்கள் பணி செய்கிறார்கள். அவர்களில் 40% பேர், வடமாநிலத் தொழிலாளர்கள்தான். அவர்கள் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் என்ற வரிசையில் கணக்கிடப்படுகிறார்கள்," என்கிறார் அவர்.

இப்படிச் சேர்க்கப்படும் தொழிலாளர்களின் ஆதார் அட்டை மற்றும் 'கே.ஒய்.சி' எனப்படும் சுயவிபரப் படிவத்தைப் பரிசீலித்து, தமிழக தொழி லாளர் நலத்துறையிடம், இத்தனை எண்ணிக்கை யில் தங்களிடம் புலம் பெயர் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்பதை முறையாகப் பதிவு செய்து, சான்று பெறுவதாகத் தெரிவிக்கிறார் அவர்.

"எங்கள் மில்களில், ஒடிஸா, உத்தரப்பிரதேசம், பீஹார், ஜார்க்கண்ட் மாநிலத் தொழிலாளர்களே அதிகமாக பணியாற்றுகின்றனர். அதிலும் சமீபகாலமாக ஒடிஸாவிலிருந்தே அதிகளவிலான தொழிலாளர்கள் பணிக்கு வருகிறார்கள்" என்று நூற்பாலைகளில் தொழிலாளர் சேர்க்கைக்கான நடைமுறைகளை விளக்கினார் வெங்கடாசலம்.



மேலும் பேசிய அவர், "ரஷ்யா—யுக்ரேன் போர் துவங்கியதிலிருந்து, கடந்த இரண்டரை ஆண்டுகளாக நூற்பாலைகள் பல விதமான சிக்கல்களைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றன. தமிழக அரசு அதீதமாக மின் கட்டணத்தை உயர்த்தி விட்டது. ஏற்கனவே இங்கு நிலைமை மோசமாக இருக்கும்போது, பெரும் எண்ணிக்கையில் புதிதாகத் தொழிலாளர்களைச் சேர்ப்பதற்கான சூழல் இல்லை. இருப்பவர்களுக்கு வேலை கொடுப்பதே சிரமமாக உள்ளது. சமீ பத்திய கலவரத்தால், வங்கதேசத்தின் ஏற்று மதி 4.5% குறைந்தது உண்மைதான். ஆனால் அங்கு சூழ்நிலை உடனடியாக சுமூகமாகி விட்ட தால், வங்கதேசத்திலிருந்து இங்கு யாரும் பணிக்கு வர வாய்ப்பேயில்லை," என்றும் அவர் விளக்கினார்.

### கோவை, திருப்பூரில் 1.6 லட்சம் புலம்பெயர் தொழிலாளர்கள்

ஐந்தாண்டுகளுக்கு முன்பாக, திருப்பூரில் வங்கதேசத்தைச் சேர்ந்த 12 பேர், தொழிலாளர்களாகப் பணி செய்ததைக் கண்டறிந்து, காவல் துறையினர் அவர்களைக் கைது செய்ததாக, திருப்பூரில் அப்போது மாவட்ட காவல் கண்காணிப்பாளராக இருந்த ஷசாங்க் சாய் கூறினார்.

கோவை மாவட்டம் அன்னூர் அருகேயுள்ள மாணிக்கம்பாளையம் என்ற இடத்திலுள்ள பனியன் நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த வங்கதேசத்தைச் சேர்ந்த முகம்மது அர்சூ (26 வயது), போலாஸ் பர்மான் (28 வயது) ஆகிய இருவர், சட்டவிரோதக் குடியேற்றத்துக்காக அன்னூர் காவல்துறையினரால், கடந்த மே 2—ஆம் தேதியன்று கைது செய்யப்பட்டனர்.

கடந்த வாரத்தில் ஈரோடு மாவட்டத்தில், வங்கதேசத்தைச் சேர்ந்த மூன்று பேரை, சட்டவிரோத குடியேற்றத்துக்காகக் கைது செய்துள்ளதாக மேற்கு மண்டல ஐ.ஜி., செந்தில்குமார் தெரிவித்தார். இவர்கள் அனைவருமே ஆதார் அட்டையை ஆவணமாகக் கொடுத்தே பணியில் சேர்ந்துள்ளனர். ஆனால் அவர்கள் போலி ஆவணங்கள் கொடுத்து, மேற்கு வங்கம் உள்ளிட்ட வெவ்வேறு மாநிலங்களில் ஆதார் அட்டையைப் பெற்றது அப்போது மாவட்ட காவல் கண்காணிப்பாளராக இருந்த ஷசாங்க் சாயின் விசாரணையில் கண்டறியப்பட்டது.

இதேபோல, இன்னும் ஏராளமான வங்கதேசத்தினர், போலி ஆவணங்களைக் கொடுத்து, ஆதார் அட்டைகளைப் பெற்று, இங்கு தொழிலாளர்களாகப் பணி செய்யவும் வாய்ப்புள்ளதாக பாரதிய ஜனதா கட்சியின் மாநில பொருளாளர் எஸ்.ஆர்.சேகர் சமீபத்தில் தெரிவித்திருந்தார்.

இதைத் தடுப்பதற்குத் தொழிலாளர் நலத்துறையில் ஏதேனும் நடைமுறைகள் உள்ளனவா, புலம் பெயர் தொழிலாளர்கள் குறித்துத் துல்லியமான பதிவு, அல்லது கணக்கெடுப்பு உள்ளதா என்று அந்தத் துறையின் அதிகாரிகளிடம் கேட்ட போது, அவர்கள் சில நடைமுறைகளை விளக்கினர்.

தமிழக அரசின் தொழிலாளர் நலத்துறையின் சார்பில், பணிக்காக தமிழகத்துக்கு வரும் புலம் பெயர் தொழிலாளர்களைப் பதிவு செய்வதற்காக ஓர் இணைய சேவை (Portal) வழங்கப்பட்டுள்ளது. அதில் பதிவு செய்யப்பட்டுள்ள தொழிற்சாலைகளில் உள்ள புலம் பெயர் தொழிலாளர்களின் விவரங்கள் பதிவு செய்யப்பட்டு, பதிவுச்சான்று பெறப்படுகிறது.

தமிழக அரசின் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் திருப்பூர் மாவட்ட இணை இயக்குநர் சரவணன் இது குறித்து கூறுகையில்,

"திருப்பூர் மாவட்டத்தில் பதிவு பெற்ற தொழிற்சாலைகளில் மட்டும் புலம் பெயர் தொழிலாளர்கள் 90,000 பேர் வரை பணி செய்வதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், பதிவு செய்யப்படாத, அமைப்பு சாரா தொழிலகங்கள் மற்றும் நிறுவனங்களில் இதற்கு இணையாக அல்லது அதற்கும் அதிகமான தொழிலாளர்கள் பணியாற்றுவதற்கு வாய்ப்புள்ளது. புலம் பெயர் தொழிலாளர்கள் அனைவருடைய விபரங்களையும் பதிவு செய்து பதிவுச்சான்று பெற வேண்டுமென்று, முறைப்படி பதிவு பெற்ற தொழில் நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. ஆனால் தொழிலாளர் நலச்சட்டம் என்று பார்க்கும் போது, நம் மாநிலத் தொழிலாளர்களுக்கும், புலம் பெயர் தொழிலாளர்களுக்கும் எல்லாமே பொதுவானதுதான்" என்று தெரிவித்தார்.

இதுகுறித்து, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் கோவை மாவட்ட இணை இயக்குநர் சீனிவாசகம் கூறுகையில், "கோவை மாவட்டத்தில் அமைப்பு சார்ந்த நிறுவனங்களில், 70,000 புலம் பெயர் தொழிலாளர்கள் பணி செய்வதாகப் பதிவு செய்துள்ளனர். ஒரு லட்சத்துக்கும் அதிகமான புலம் பெயர் தொழிலாளர்கள், அமைப்பு சாரா பணிகளில் இருப்பதற்கு வாய்ப்புள்ளது. பதிவு செய்யும் புலம்பெயர் தொழிலாளர்களின் ஆதார ஆவணங்களையும், நிறுவனங்களை நடத்துவோர்தான் ஆய்வு செய்து, அவற்றின் நம்பகத்தன்மையை உறுதி செய்து கொள்ள வேண்டும். நாங்கள் பரவலாக ஆய்வு நடத்தும்போது, இத்தகைய ஆவணங்களையும் ஆய்வு செய்கிறோம்" என்று துறையின் நடைமுறையை விளக்கினார்.

அதிகாரிகள் கூறும் நடைமுறைகளின்படி பார்க்கும்போது, தொழிலகங்களால் பதிவு செய்யப்படும் புலம் பெயர் தொழிலாளர்களின் ஆதார ஆவணங்களைப் பரிசீலிக்கும் நடைமுறையோ, தொழில்நுட்பமோ, தமிழக அரசின் தொழிலாளர் நலத்துறையிடம் இல்லை என்று தெரிகிறது.

### 'கோவையில் மட்டும் 3 லட்சம் வெளிமாநிலத் தொழிலாளர்கள்'

கோவையின் தொழிற்துறையில் வடமாநிலத் தொழிலாளர்களின் பங்கு குறித்து 'கொங்கு குளோபல் ஃபோரம்' அமைப்பின் இயக்குநர் சதீஷ்குமார் கூறுகையில், வடமாநிலத் தொழிலாளர்கள் இன்றி, கோவையில் தொழில்களே இல்லை என்கிற அளவுக்கு, அவர்களின் உழைப்பும் பங்களிப்பும் உள்ளது என்றார்.

"கோவையிலுள்ள நூற்பாலைகளில் மட்டுமின்றி, வார்ப்படத் தொழிற்சாலைகள், கட்டுமான நிறுவனங்கள், தென்னை நார் பொருள் தயாரிப்பு நிறுவனங்கள், உணவகங்களிலும் பல ஆயிரம் வெளிமாநிலத் தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். குறிப்பிட்டுச் சொல்வதானால், தங்க நகை தயாரிப்புத் தொழிலில் கோலோச்சி வரும் கோவையில், அசாம் மற்றும் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த பல ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர்" என்கிறார்.

மேலும், "ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், கோவை மாவட்டத்தில், 3 லட்சத்துக்கும் அதிகமான வெளிமாநிலத் தொழிலாளர்கள் இருக்க வாய்ப்புள்ளது. அதனால்தான், இங்கிருந்து வடமாநிலங்களுக்கு இயக்கப்படும் ரயில்களின் எண்ணிக்கை மிக அதிகமாகியுள்ளது. எல்லா ரயில்களுமே முழுவதுமாக நிரம்பி வழிந்து செல்கின்றன. அவர்களுக்காகவே நாங்கள் இன்னும் கூடுதலான ரயில்களை இயக்க வேண்டுமென்று ரயில்வே துறையிடம் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம்," என்கிறார்.

### திருப்பூரில் என்ன நிலைமை?

திருப்பூர் பனியன் நிறுவனத்தில் இப்படியாக வங்கதேசத்தினர் இங்கு தொழிலாளர்களாக



பணியில் சேர்ந்திருக்க வாய்ப்புள்ளதாகக் கூறப்படுவது பற்றி திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் கே.எம்.சுப்பிரமணியம் கூறுகையில்,

"திருப்பூரில் உள்ள 2,000 யூனிட்களில், 2 லட்சம் வடமாநிலத் தொழிலாளர்கள் வேலை பார்க்கிறார்கள். அவர்களைப் பணிக்குச் சேர்ப்பதற்குப் பல நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. அவர்களைக் குறித்த அனைத்து விவரங்களும் முழுமையாகச் சேகரிக்கப்படுகின்றன. ஆதார் அட்டை, கல்விச் சான்றிதழ் ஆகியவற்றுடன், தொழில் திறன் பயிற்சிக்காக அவர்களின் மாநில அரசுகளால் தரப்படும் சான்றுகளையும் வாங்கி, பல விதங்களில் அவற்றைப் பரிசீலிக்கிறோம்" என்கிறார் அவர்.

மேலும், "இதுகுறித்து அனைத்து பனியன் நிறுவனங்களில் உள்ள மனித வளத்துறை அலுவலர்களுக்குத் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. இப்போது அசாம் முதல்வர் இப்படியொரு கருத்தைச் சொன்ன பிறகு, அமைப்பின் சார்பில் விழிப்புடன் இருக்குமாறு கூறியுள்ளோம். இதெல்லாம் ஒரு புறமிருக்க, வங்கதேசத்தில் எல்லாவற்றையும் விட்டுவிட்டு இங்கே பணிக்கு வரக்கூடிய சூழல் எதுவும் அங்கிருப்பதாகத் தெரியவில்லை. நாங்கள் அங்குள்ள 'பிராண்டட்' ஆடை தயாரிப்பு நிறுவனங்களில் விசாரித்த வரையில், அங்கு இப்போதும் தொழிலாளர்கள் வருகை 95% அளவுக்கு இருக்கிறது. அதனால் அங்கிருந்து பெருமளவில் இங்கு ஊடுருவி வந்து பணி செய்வதற்கான தேவையும், சூழலும் இல்லை என்று தெரிகிறது," என்று தெரிவித்தார் திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத் தலைவர் கே.எம்.சுப்பிரமணியம்.

### 'இது நாட்டின் பாதுகாப்பு சார்ந்தது'

எந்தவிதமான முகாந்திரமும் இல்லாத சூழ்நிலையில், அசாம் முதல்வர் இந்தக் கருத்தைச் சொன்னதன் பின்னணியிலும், அதை சமூக ஊடகங்களில் பரப்புவதிலும் தமிழகத்தில் பாதுகாப்பற்ற சூழ்நிலை நிலவுவது போன்ற ஒரு மாயையை ஏற்படுத்தும் அரசியல் உள் நோக்கம் இருப்பதாக எதிர்க்கட்சியினர் குற்றம்சாட்டுகின்றனர்.



ஆனால் காரணமின்றி ஒரு மாநிலத்தின் முதல்வர் எந்தக் கருத்தையும் தெரிவித்திருக்க மாட்டார் என்று அழுத்தமாகச் சொல்கிறார், பாரதிய ஜனதா கட்சியின் மாநிலப் பொருளாளரும், கட்சி நடவடிக்கைகளைக் கண்காணிக்க நியமிக்கப்பட்டுள்ள ஆறு பேர் கொண்ட குழுவின் உறுப்பினருமான எஸ்.ஆர்.சேகர்.

"வங்கதேசத்தில் நடக்கும் அரசியல் குழப்பத்தில் ஏராளமான வங்கதேச அகதிகளும், ரோஹிஞ்சா முஸ்லிம்களும் இந்திய எல்லையான அஸ்ஸாம், திரிபுரா, மேற்கு வங்கம் மாநிலங்களில் சட்டவிரோதமாக புகுவதாகத் தகவல்கள் வருகின்றன. அதை விட, அசாம் முதல்வர் சொல்லியிருப்பதுதான் கவனம் ஈர்த்துள்ளது," என்கிறார் சேகர்.

"வங்கதேசத் தொழிலாளர்கள், ஜவுளித் துறையில் பயிற்சி பெற்றவர்கள் என்பதால், அந்தத் துறையில் பணி கிடைக்கும் கோவையைத் தேடி வந்திருப்பதாகவும், அதனால் தேசத்தின் பாதுகாப்புக்கு பெரிய அச்சுறுத்தல் இருப்பதாகவும் பிஸ்வாஷ் கூறியிருக்கிறார். அவருடைய கவலைகள் உண்மையாக இருக்க வாய்ப்புள்ளது," என்கிறார் அவர்.

"எனவே அசாம் முதல்வரின் தகவலையே ஆதாரமாக வைத்து, மத்திய அரசு உடனடியாக தலையிட்டு இந்த சட்டவிரோத ஊடுருவலை தடுக்க வேண்டும். கோவையிலுள்ள தொழிலதிபர்களும், ஆலை உரிமையாளர்களும் இந்த விஷயத்தில் கவனம் செலுத்தி, பணிக்குச் சேர்ப்பவர்களின் விபரங்களை முழுமையாகப் பரிசீலிக்க வேண்டும். இது நாட்டின் பாதுகாப்புக்குச் செய்யும் கடமையாகும்," என்கிறார் எஸ்.ஆர்.சேகர்.

### 'கோவையில் இருப்பது அமைதியும் வளர்ச்சியும் தான்'



தி.மு.க—வைச் சேர்ந்த கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார், இதை மறுக்கிறார்.

"கோவையின் அமைதியும், வளர்ச்சியும் பாரதிய ஜனதா கட்சியினரின் கண்களை உறுத் திக் கொண்டிருக்கிறது. அதைத் தடுக்கும் முயற்சிகளில் இதுவும் ஒன்று" என்று அவர் கூறுகிறார்.

மேலும், "இது முழுக்க முழுக்க அரசியல் உள்நோக்கம் கொண்டதுதான். ஒரு மாநிலத்தின் முதல்வர், பொதுவெளியில் வெளிப்படையாக இப்படிப் பேசுவது இதுதான் முதல் முறை. அவருக்கு உண்மையிலேயே நாட்டின் நலனின் மீது அக்கறையிருந்தால், உள்துறைக்கும், தமிழக முதல்வருக்கும் கடிதம் எழுதியிருக்க வேண்டும். அப்படி இருந்தால், முதல்வர் உடனடியாகக் காவல்துறையை முடுக்கிவிட்டு, அதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகளை எடுப்பார். அதை விடுத்து, கோவைதான் இலக்கு என்று பகிரங்கமாகக் கூறி, பீதியைக் கிளப்பியிருக்கிறார். உண்மையைச் சொல்லப்போனால், தேர்தல் தோல்விக்குப் பின், பாரதிய ஜனதா கட்சியினருக்குதான் கோவை முக்கிய இலக்காகவுள்ளது. அதைத்தான் அவர் கருத்து வெளிப்படுத்துகிறது," என்கிறார் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் ராஜ்குமார்.

### காவல் துறையினர் சொல்வது என்ன?

ஆனாலும், ஒரு மாநிலத்தின் முதல்வர் கொடுத்த எச்சரிக்கை என்ற வகையில், அதற்கு முக்கியத்துவம் அளித்து, வங்கதேசத்தைச் சேர்ந்தவர்களின் ஊடுருவலைத் தடுக்க தொழில் அமைப்பினரையும், வேலை வாய்ப்பு முகவர்களையும் அழைத்து கூட்டம் நடத்தவுள்ளதாகத் தெரிவித்திருக்கிறார் திருப்பூர் மாநகர காவல் ஆணையர் லட்சுமி.

திருப்பூர் மாவட்டப்பகுதிகளில் உள்ள பனியன் நிறுவனங்களிலும் கண்காணிப்பை தீவிரப்படுத்தியிருப்பதாகச் சொல்கிறார் திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா.

கோவையை தலைமையிடமாகக் கொண்டுள்ள மேற்கு மண்டலத்தின் காவல்துறைத் தலைவர் டி.செந்தில்குமார் இது குறித்து கூறுகையில், "அதுபற்றி உடனடியாக எந்தக் கருத்தும் தெரிவிக்க முடியாது. ஆனால் அச்சப்படும் அளவுக்கு, எந்தவிதமான ஊடுருவலும் இல்லை" என்று சுருக்கமாகத் தெரிவித்தார்.

கோவை மாநகர காவல் ஆணையர் பாலகிருஷ்ணன், "தங்க நகை தயாரிப்பு நிறுவனங்களை நடத்துவோர்க்கு, சட்டவிரோதமாகத் தொழிலாளர்கள் ஊடுருவுவதைத் தடுப்பதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. இதற்காக ஒரு சிறப்பு நுண்ணறிவுப் பிரிவும் உருவாக்கப்பட்டு கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது" என்று தெரிவித்திருக்கிறார்.

கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கார்த்திகேயன், "வங்கதேசத்தில் ஏற்பட்ட சூழ்நிலையைத் தொடர்ந்து, இங்குள்ள நிறுவனங்களுக்கான வேலை வாய்ப்பு முகவர்களை அழைத்து பல விதமான அறிவுறுத்தல்களை வழங்கியிருக்கிறோம். கண்காணிப்பையும் தீவிரப்படுத்தியிருக்கிறோம்" என்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# சென்னை விமான நிலையத்தில் மகாவிஷ்ணு கைது எத்தனை ஆண்டுகள் சிறைத் தண்டனை கிடைக்கலாம்?

சென்னையில் அரசுப் பள்ளி ஒன்றில் பாவம், புண்ணியம் குறித்து மகாவிஷ்ணு என்பவரின் பேச்சு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அந்த நிகழ்ச்சியில், பார்வை மாற்றுத் திறனாளி ஆசிரியரை அவமதித்ததாக அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆஸ்திரேலியாவில் இருந்து இந்தியா திரும்பிய மகாவிஷ்ணுவை, சென்னை விமான நிலையத்திலேயே காவல்துறையினர் கைது செய்தனர். அவர் நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

பள்ளிக்கல்வித்துறை மீதான குற்றச்சாட்டுகளை திசைதிருப்பவே மகாவிஷ்ணு விவகாரம் பெரிதாக்கப்படுவதாக, இந்து அமைப்பினர் விமர்சித்துள்ளனர். 'சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகளில் அரசு இதுபோன்று கெடுபிடி காட்டுவதில்லை' என்பது அவர்களது குற்றச்சாட்டு.

இந்தக் குற்றச்சாட்டு குறித்து பள்ளிக்கல்வித் துறை என்ன சொல்கிறது? பள்ளிகளில் மதம் சார்ந்த நிகழ்வுகள் விவகாரத்தில் தமிழ்நாடு அரசின் நடவடிக்கை என்ன?

சென்னை அசோக் நகரில் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாணவிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் பேசுவதற்காக 'பரம் பொருள்' அறக்கட்டளையை நடத்தி வரும் மகாவிஷ்ணு என்பவர் அழைக்கப்பட்டார். அவர் தனது பேச்சில், பாவ புண்ணியம் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பேசியதாக கூறப்படுகிறது.

பின்னர், சென்னை சைதாப்பேட்டையில் உள்ள ஆண்கள் மாதிரி பள்ளியில் பேச அழைக்கப்பட்டார். அங்கு மகாவிஷ்ணுவின் பேச்சுக்கு பார்வை மாற்றுத் திறனாளியும் தமிழாசிரியருமான சங்கர் எதிர்ப்பு தெரிவித்தார். அவருடன் மேடையிலேயே மகாவிஷ்ணு வாக்குவாதம் செய்த காட்சிகள் இணையத்தில் வெளியாயின.

**மகாவிஷ்ணு மீது குவிந்த புகார்கள்**

சமூக வலைதளங்களில் இந்த காட்சிகள் வெளியாகி சலசலப்பை ஏற்படுத்திய நிலையில், இரண்டு பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களும் இடமாற்றம் செய்யப்பட்டனர். மகாவிஷ்ணுவின் பேச்சைக் கண்டித்து மாற்றுத் திறனாளிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். தொடர்ந்து, சைதாப்பேட்டை காவல்நிலையம் மற்றும் அசோக் நகர் காவல்நிலையத்தில் அவர் மீது புகார்கள் அளிக்கப்பட்டன.

தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத் திறனாளிகள் சங்கத் தலைவர் வில்சன் அளித்த புகார் மனுவில், 'மகாவிஷ்ணு மீது மாற்றுத் திறனாளிகள் வன்கொடுமை சட்டம் மற்றும் ஊனமுற்றோர் உரிமைகள் சட்டப்பிரிவு 72(அ) படி நடவடிக்கை எடுத்து கைது செய்ய வேண்டும்' எனக் குறிப்பிட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து, திருப்பூர் குளத்துப் பாளையத்தில் செயல்படும் மகாவிஷ்ணுவின் பரம்பொருள் அறக்கட்டளையில் போலீசார் விசாரணை நடத்தினர். இதன் தொடர்ச்சியாக, ஆஸ்திரேலியாவில் இருந்து நாடு திரும்பிய மகாவிஷ்ணுவை சென்னை விமான நிலையத்தில் காவல்துறையினர் கைது செய்தனர். மகாவிஷ்ணு மீது 5 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

சென்னை சைதாப்பேட்டை மாஜிஸ்திரேட் அனிதா ஆனந்த் முன்பு ஆஜர்படுத்தப்பட்ட அவரை, செப்டம்பர் 20—ஆம் தேதி வரை நீதிமன்ற காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

**இதுபோன்ற நபர்களுக்கு வரவேற்பு கிடைப்பது ஏன்?**

"ஆன்மிகத்துக்கு தேவையான முதிர்ச்சி மகாவிஷ்ணுவிடம் இருப்பது போல தெரியவில்லை. இந்து ஆன்மிகம் என்பது அனைத்தையும் துறப்பது தான். பரம்பொருள் என்று சொல்லும் நிலைக்கு அவர் மாறவில்லை. ஓஷோவிடம் எந்தக் கேள்வியைக் கேட்டாலும் அதற்கு ஒரு பதில் இருக்கும். இவர்களைப் போன்றவர்களிடம் கேள்வி கேட்டால் கோபப்படுவார்கள்" என்கிறார், எழுத்தாளர் இரா.முருகவேள்.

"மகாவிஷ்ணு சிறைக்கு சென்று வந்தாலும் அவரை ஆதரிப்பதற்கு ஒரு கூட்டம் தயாராக இருக்கும். மறுபிறவி, பூர்வ ஜென்மம் ஆகிய விஷயங்களில் நம்பிக்கை உள்ள கூட்டம் அவரை ஆதரிக்கவே செய்யும்" என்று அவர் கூறுகிறார்.

"தன் மீது மக்களுக்கு பயபக்தி, மரியாதை இருக்க வேண்டும் என மகாவிஷ்ணுவை போன்றவர்கள் எதிர்பார்ப்பது வழக்கம். அது கேள்விக் கேட்கும் போது கோபப்படுகின்றனர். மாற்றுத் திறனாளி ஆசிரியரை பேசவிடாமல் செய்ய வேண்டும் என்பது தான் அவரின் நோக்கமாக இருந்துள்ளது" என்று குறிப்பிடுகிறார் முருகவேள்.



இணையத்தில் வைரலான தமிழாசிரியர் சங்கரும், மகாவிஷ்ணுவும் வாக்குவாதம் செய்யும் காட்சி





மாற்றுத்திறனாளி ஆசிரியரை பேச விடாமல் செய்ய வேண்டும் என்பது தான் மகாவிஷ்ணுவின் நோக்கமாக இருந்ததாக குறிப்பிடுகிறார் எழுத்தாளர் முருகவேள்

**இந்து அமைப்புகள் குற்றச்சாட்டு**

ஆனால், பள்ளிக்கல்வித் துறையில் நடக்கும் தவறான விஷயங்களை திசைதிருப்பவே மகா விஷ்ணு விவகாரம் பெரிதுபடுத்தப்படுவதாக கூறுகிறார், ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் வழக்கறிஞர் பிரிவான அகில பாரத வழக்கறிஞர்கள் சங்கத்தின் முன்னாள் மாநில செயலாளர் வழக்கறிஞர் ராமமூர்த்தி.

"கிருஷ்ணகிரியில் போலி என்.சி.சி பயிற்சிகளை நடத்தி மாணவிகளுக்கு பாலியல் வன்கொடுமை நடந்தது. மற்ற பள்ளிகளிலும் இது போல போலி முகாம்கள் நடத்தப்பட்டதாக தகவல் வெளியானது. இதுபோன்று பள்ளிக் கல்வித்துறை மீது எழுந்த விமர்சனங்களை மறைப்பதற்காக நடத்தப்படும் யுக்தியாகவே இதைப் பார்க்கிறோம்". என்கிறார் ராமமூர்த்தி.

தொடர்ந்து பேசிய அவர், "மகாவிஷ்ணு விவகாரத்தை வைத்துக் கொண்டு பள்ளிகளில் என்ன பேச வேண்டும், என்ன பேசக் கூடாது என்பதில் வழிகாட்டுதல்களை கொண்டு வருவதற்கு இதைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். இதற்கு முன்பு இவ்வாறு மகாவிஷ்ணு பேசியதாக எந்த தகவலும் இல்லை. சொல்லிக் கொடுக்கப்பட்டு பேசப்பட்டதா என்பதை ஆராய வேண்டும். இதை நாடகமாகவே பார்க்கிறோம்" என்றார்.

"மதத்தையும் அரசையும் தள்ளி வைப்பது என்பது வேறு. இவர்கள் இந்து மதத்தை மட்டும் தள்ளி வைக்கின்றனர். கிறிஸ்துவ, இஸ்லாமிய பள்ளிகளில் நடக்கும் விஷயங்களைக் கண்டு கொள்ள மாட்டார்கள்" என்று அவர் குற்றம் சாட்டுகிறார்.

**பள்ளிக்கல்வித் துறை விளக்கம்**

வழக்கறிஞர் ராமமூர்த்தியின் குற்றச்சாட்டை பள்ளிக்கல்வித் துறை இயக்குநர் கண்ணப்பன் மறுத்ததோடு, "இந்தப் பிரச்னையில் தலைமை ஆசிரியையின் பங்களிப்பு எதுவும் இல்லை. பள்ளி மேலாண்மைக் கமிட்டியை சேர்ந்த பெண்மணி ஒருவர் தான் மகாவிஷ்ணுவை கூட்டி வந்திருக்கிறார். இவ்வாறு பேசுவார் எனத் தெரிந்திருந்தால் அவரை அனுமதித்திருக்க மாட்டார்கள். அதேநேரம், சைதாப்பேட்டை பள்ளிக்கு, அசோக் நகர் பள்ளி தலைமை ஆசிரியையை தான் கூட்டிச் சென்றுள்ளார். அங்கு தான் பிரச்னை ஏற்பட்டது.

மெட்ராஸ் கல்வி சட்டத்தில், மதம் சார்பான எந்த நிகழ்வுகளையும் பள்ளி வகுப்பு நேரங்களில் நடத்தக் கூடாது என உள்ளது. இது அனைத்துப் பள்ளிகளுக்கும் பொருந்தும். சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகளில் அவர்களுக்கான சலுகைகள் உள்ளன. ஆனால், வகுப்பறைகளில் நடத்தப்பட வேண்டியதை மட்டுமே அவர்கள் செயல்படுத்த வேண்டும்" எனவும் தெரிவித்தார் கண்ணப்பன்.

**மகாவிஷ்ணுவுக்கு எத்தனை ஆண்டு சிறைத்தண்டனை கிடைக்கும்?**

மகாவிஷ்ணு மீதான சட்ட நடவடிக்கைகள் குறித்து மூத்த வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன் கூறுகையில், "மத ரீதியான உணர்வுகளை புண்படுத்தினால் மட்டுமே வெறுப்பு பேச்சு என்ற பிரிவில் வழக்கு பதிவாகும். இன்னொரு மதத்தை பாதிக்கும் வகையில் மகாவிஷ்ணு எதையும் பேசவில்லை. பார்வை மாற்றுத் திறனாளியிடம், 'முன் ஜென்ம பாவம்' எனக் கூறியது அவர்களை அவமதிக்கும் செயல். அதற்காக அவதூறு வழக்கு மட்டுமே பதிவு செய்ய முடியும்" என்கிறார்.

"அவதூறு என்பது தனி மனிதர்களை இலக்காக வைத்து பேசினால் வரும். அவர், பார்வை மாற்றுத் திறனாளிகள் அனைவரையும் குறிப்பிடுகிறார். பகுத்தறிவுவாதம் பேசும் பிரிவினரை அவமதிக்கும் வகையில் பேசியதாக அவதூறு வழக்கைப் பதிவு செய்யலாம். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து கைது செய்யலாம். குற்றம் நிரூபிக்கப்பட்டால் மட்டுமே இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை அல்லது அபராதம் விதிக்கப்படும்" என்கிறார் ராதாகிருஷ்ணன்.

**'மாணவர்களுக்கு மனச்சோர்வு ஏற்படும்'**

"தன்னால் அனைத்தையும் சாதிக்க முடியும்; மற்றவர்களுக்கு இல்லாத சக்தி தன்னிடம் இருப்பதாக சிலர் நினைக்கின்றனர். அதுதான் இதுபோன்ற சர்ச்சைகளுக்கு காரணம்" என்கிறார் மூத்த மனநல மருத்துவர் சிவநம்பி.

இது குறித்து மேலும் அவர் கூறுகையில், "பள்ளி மாணவர்களிடம் இவ்வாறு பேசும் போது அவர்களுக்கு மனவருத்தமும் மனச் சோர்வும் ஏற்படும். பிற்காலத்தில் இது பாதிப்புகளை ஏற்படுத்தும். பொது இடத்தில் இதுபோன்று பேசும் போது பிரச்னை இல்லை. அதைக் கேட்பவர்கள் கேட்கட்டும். மற்றவர்கள் புறக்கணித்துவிட்டு செல்வார்கள். பள்ளிகளில் இவ்வாறு பேசுவது கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டும்" என்கிறார்.



**அரசின் 4 அறிவுறுத்தல்கள்**

தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கத்தில், பள்ளிக் குழந்தைகளுக்கு முற்போக்கான அறிவியல்பூர்வமான கருத்துகளையும் வாழ்க்கை நெறிகளையும் பெறும் வகையில் புதிய வழிமுறைகளை வகுத்து வெளியிடுவதற்கு தான் ஆணையிட்டுள்ளதாக தெரிவித்திருந்தார்.

அதற்கேற்ப, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுடன் பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் கண்ணப்பன் ஆலோசனை நடத்தினார். இந்தக் கூட்டத்தில் பல்வேறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதாக கண்ணப்பன் தெரிவித்தார்.

"கூட்டத்தில், எந்த சூழலிலும் தனியார் நிகழ்வுகளை பள்ளிகளில் அனுமதிக்கக் கூடாது; பாடம் தொடர்பானவற்றை மட்டும் பேச அனுமதிக்கலாம்; ஆசிரியர்கள், பேராசிரியர்களைக் கொண்டு தன்னம்பிக்கை வகுப்புகளை எடுக்கலாம். பள்ளிகளில் இதுபோன்ற நிகழ்வுகள் நடத்தப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பன உள்ளிட்ட அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன" என்கிறார் கண்ணப்பன்.

அனைத்துப் பள்ளிகளும் வரும் காலத்தில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை வகுக்க, முதலமைச்சர் ஸ்டாலின் உத்தரவின் பேரில், கமிட்டி ஒன்று அமைக்கப்பட உள்ளதாகவும் கண்ணப்பன் குறிப்பிட்டார்.

**தமிழ்நாடு அரசின் உண்மை சரிபார்ப்புக் குழு தகவல்**

இந்நிலையில், 'மகாவிஷ்ணுவை கண்டித்த மாற்றுத்திறனாளி ஆசிரியர் சங்கர் கிறிஸ்துவர்' என்ற தகவல் இணையத்தில் பரவியது. "இது முற்றிலும் தவறான தகவல். சமூக வலைதளத்தில் பகிரப்பட்டு வரும் 'அந்தோணி பர்ணாந்து' என்ற முகநூல் பக்கம், ஆசிரியர் சங்கருடையது அல்ல" என தமிழ்நாடு அரசின் உண்மை சரிபார்ப்புக் குழு தெரிவித்துள்ளது.



மகாவிஷ்ணு மீது தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத் திறனாளிகள் சங்கத் தலைவர் வில்சன் புகார் அளித்த காட்சி

மரம் வளர்ப்போம் மழை பெறுவோம்!

# பெண்கள் மீது அதிகரிக்கும் டிஜிட்டல் வன்முறைகள்-தற்காத்துக் கொள்வது எப்படி?

ஸ்வேதா நடனமாடுவதை மிகவும் விரும்புகிறார். அவர் தனது சிறு சிறு வீடியோக்களை இன்ஸ்டாகிராமில் வெளியிடுகிறார். அது தனக்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கும் ஒரு விஷயம் என்கிறார் அவர்.

ஆனால், ஒருநாள் இன்ஸ்டாவில் தனது புகைப்படத்துடன் சில ஆபாசமான விஷயங்களை எழுதி சிலர் பகிர்ந்திருப்பதைப் பார்த்த போது, அவர் அதிர்ச்சியடைந்தார்.

அந்தப் பதிவை நீக்குவதற்குப் பல நாட்கள் ஆனது. இந்தச் சம்பவம் அவரை மனதளவில் உலுக்கியது. அவர் அதற்குப் பிறகு டிஜிட்டல் தளங்களில் பாதுகாப்பாக உணரவில்லை.

பாலின சமத்துவத்திற்கான பாதையில், பெண்களுக்கான டிஜிட்டல் சமத்துவமும் பாதுகாப்பான வெளியும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஆனால் பெண்கள் மீதான டிஜிட்டல் வன்முறை அத்தகைய சமத்துவத்தை நோக்கிய பாதையில் உள்ள சவால்களை அதிகரித்துள்ளது.

ஆகவே, டிஜிட்டல் வன்முறை என்றால் என்ன, அதை எதிர்கொண்டால் எத்தகைய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பனவற்றை இங்கு தெரிந்துகொள்வோம்.



**டிஜிட்டல் வன்முறை என்றால் என்ன?**

டிஜிட்டல் புரட்சியால், மொபைல், இணையம் ஆகியவற்றை அணுகும் வசதி எளிதில் இந்தியாவில் உள்ள மக்களுக்குக் கிடைக்கிறது. இந்தப் புரட்சி சந்தேகத்திற்கு இடமின்றி விழிப்புணர்வையும் அதிகாரத்தையும் மக்களிடையே அதிகரித்தது.

ஆனால், பல ஆண்டுகளாக நிஜ உலகில் பெண்கள் எதிர்கொள்ளும் வன்முறையும் டிஜிட்டல் உலகில் வேறு வடிவத்தில் ஊடுருவியது.

ஐ.நா. மக்கள் தொகை நிதியத்தின்படி, பெண்கள் மற்றும் சிறுமிகள் விஷயத்தில், இது நேரடியாக அவர்கள் களங்கப்படுத்தப்படுவதுடன் தொடர்புடையது. இந்த நடவடிக்கைகள் அவர்களது மனநலனை பாதிப்பதோடு, அவர்கள் இணைய உலகிலும் நிஜ உலகிலும் தனிமைப்படுத்தப்பட்டதாக உணரத் தொடங்குகிறார்கள். இது பணியிடம், பள்ளி அல்லது தலைமைப் பதவிகளில் அவர்களின் திறனைப் பாதிக்கிறது.

ஆன்லைன் துன்புறுத்தல், வெறுப்பூட்டும் பேச்சு, புகைப்படங்களை தவறாகப் பயன்படுத்துதல், மிரட்டல், ஆன்லைனில் பின்தொடர்ந்து தொந்தரவு செய்தல், ஆபாசமான விஷயங்களை அனுப்புதல் மற்றும் பல விஷயங்கள் டிஜிட்டல் வன்முறையின் ஒரு பகுதியாக உள்ளது. செயற்கை நுண்ணறிவு மூலம் அதன் ஆபத்துகள் இன்னும் அதிகரித்துள்ளன.

ஐ.நா.வின் கூற்றுப்படி, பாலின சமத்துவமின்மை, பாலினப் பாகுபாடு ஆகியவற்றில் வேரூன்றிய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களால் செய்யப்படும் வன்முறை மற்றும் டிஜிட்டல் ஊடகம் அல்லது தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நிகழ்த்தப்படும் அல்லது விளம்பரப்படுத்தப்படும் வன்முறை இந்த வகையின்கீழ் வருகிறது.

தி எகனாமிஸ்ட் இன்டெலிஜென்ஸ் யூனிட் நடத்திய ஆய்வின்படி, உலகளவில் 85 சதவீத பெண்கள் ஆன்லைன் வன்முறையை எதிர்கொண்டுள்ளனர்.

இந்தியாவில் உள்ள தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் தரவுகளின்படி, கோவிட் பேரிடருக்குப் பிறகு பெண்களுக்கு எதிரான சைபர் குற்ற வழக்குகள் அதிகமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்தக் குற்றத்தில் பிளாக்மெயில் செய்வது/ அவதூறு பரப்புவது/ புகைப்படங்களைத் தவறாகச் சித்தரிப்பது/ ஆபாசமான விஷயங்களை அனுப்புவது/ போலி சுயவிவரம் போன்ற விஷயங்கள் அடங்கும்.

ஸ்வேதா விஷயத்தில், அவரது புகைப்படங்களை பதிவேற்றிய நபரை அவருக்குத் தெரியாது. அவர் அந்தப் பதிவுகள் குறித்துப் புகாரளித்தார். அதன்பிறகு அது அகற்றப்பட்டது. ஆனால், ரிம்ஜிம் விஷயத்தில் அப்படி நடக்கவில்லை.

"எனக்கு நடந்த விஷயத்தில், என் குடும்பம் எனக்கு ஆதரவளிக்காமல் இருந்திருந்தால், அதை எதிர்த்து என்னால் சட்டரீதியாகப் போராடியிருக்கவே முடியாது," என்கிறார் ரிம்ஜிம்.

தனக்கு அறிமுகமான ஒருவர் தனது புகைப்படங்களைத் தவறாகச் சித்தரித்து, சமூக ஊடகங்களில் வெளியிடத் தொடங்கியதாக ரிம்ஜிம் கூறுகிறார். அவர் அந்தக் கணக்கு குறித்துப் புகாரளித்தபோது, அந்த நபர் பல கணக்குகளை உருவாக்கி ரிம்ஜிம்மை இணையவழியில் துன்புறுத்தவும் மிரட்டவும் தொடங்கியுள்ளார்.

ரிம்ஜிம் மற்றும் ஸ்வேதா விஷயத்தில் பொதுவான ஒரு விஷயம் உண்டு. இந்தச் சம்பவங்களின் தாக்கம் அவர்களுடைய மனதில் நீண்டகாலமாக இருந்தது. அதிலிருந்து மீள அவர்களுக்கு நீண்டகாலம் எடுத்தது.

**சட்டம் சொல்வது என்ன?**

இது குறித்து வழக்கறிஞர் சோனாலி கட்வஸ்ரா கூறுகையில், இந்தியாவில் இதற்கான சட்டங்கள் உள்ளன. ஆனால், வழக்குகள் நீண்ட நாட்களுக்கு நீடிப்பதே பிரச்னை.

டிஜிட்டல் வன்முறையைக் கையாள இந்திய சட்டத்தில் பல விதிகள் இருப்பதாக அவர் கூறுகிறார். முதலில், இந்த இரண்டு விஷயங்களைச் செய்ய வேண்டும்.

நீங்கள் எந்த சமூக ஊடகத்தில் இருந்தாலும், சம்பந்தப்பட்ட ஐடியை தடுக்க உங்களுக்கு உரிமையும் வசதியும் உள்ளது. அதுகுறித்து அங்கேயே புகாரளிக்கலாம்.

இந்தக் குற்றங்கள் 'சைபர் கிரைம்' வகையின்கீழ் வருகின்றன. நீங்கள் தேசிய சைபர் கிரைம் புகாரளிக்கும் தளத்தில் வழக்குப் பதிவு செய்யலாம்.

சோனாலி கட்வாஸ்ராவின் கூற்றுப்படி, "சட்டத்தில் பல விதிகள் உள்ளன. அவை புதியவை அல்ல. தகவல் தொழில்நுட்ப சட்டப் பிரிவுகள் 66. 67, 71 ஆகியவற்றின் கீழ் அவை ஏற்கெனவே உள்ளன. அது டிஜிட்டல் வன்முறைக்கு எதிராக பாதுகாப்பு அளிக்கிறது.

யாராவது ஒரு சமூக ஊடக கணக்கை உருவாக்கியிருந்தால், அவரது உண்மையான பெயர், உங்களைப் பின்தொடர்வது, உங்கள் புகைப்படத்தைத் தவறாகச் சித்தரிப்பது, உங்களுக்கு ஆபாசமான செய்திகளை அனுப்புவது, அல்லது உங்களை அவதூறு செய்யும் செயல்களில் ஈடுபடுவது என எதுவாக இருப்பினும், இந்தச் சட்டத்தின்கீழ் புகாரளிக்கலாம்," என்று விளக்கமளித்தார்.

அடையாளம் தெரியாத நபராக இருந்தால், அந்த நபரின் சமூக ஊடக கணக்கு விவரங்களை வழங்குவதன் மூலம் புகார் அளிக்கலாம்.

இந்தியாவில் இந்த விவகாரத்திற்கு எதிராக இருக்கும் சட்டப்பிரிவுகளில் எந்தப் பிரச்னையும் இல்லை, அதன்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை முடிப்பதில்தான் பிரச்னை இருப்பதாக சோனாலி கட்வஸ்ரா நம்புகிறார்.

இதற்கு, "புதிதாக ஏதாவது கொண்டுவர வேண்டும். அது மிகவும் எளிதானது. ஒருவர் தனது அடையாளத்தை மறைத்து ஒரு சமூக ஊடக கணக்கை உருவாக்குவதும் அடையாளத்தை வெளிப்படுத்தாமல் ஒரு கணக்கை உருவாக்குவதும் கொஞ்சம் கடினமாக இருக்க வேண்டும்" என்கிறார் அவர்.

மேலும், "இதுபோன்ற வழக்குகளில் காவல் துறையினர் அதிகபட்ச உணர்திறனுடன் செயல்பட வேண்டும். பாலியல் வல்லுறவு அல்லது கொலை நடந்தால் மட்டுமே அவர்கள் விழிப்புடன் செயல்பட வேண்டும் என்றில்லை. அவர்கள் அதற்குத் தூண்டும் சிறிய தீப்பொறிகளைத் தொடக்க நிலையிலேயே கிள்ளியெறிய, அதையும் அந்தக் குற்றங்களுக்கு நிகரான தீவிரத்துடன் அணுக வேண்டும்" என்கிறார் சோனாலி கட்வஸ்ரா.

**மனதளவில் ஏற்படும் பாதிப்புகள்**

"நான் மணிக்கணக்கில் அழுதேன். அந்தப் பதிவைப் பார்ப்பவர்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்றுதான் எப்போதும் நினைத்துக் கொண்டிருந்தேன். அந்த பிளாக்மெயிலிங்கில் இருந்து வெளியே வர ஏதாவது வழி இருக்கிறதா என்று நான் தேடியபோது இருள் சூழ்ந்திருந்தேன். புகார் தெரிவிக்க நினைத்த நேரத்தில், எனக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது. அதனால் அச்சமாக இருந்தது," என்று தான் எதிர்கொண்ட மன வேதனையை விவரித்தார் ரிம்ஜிம்.

ரிமிஜிம் ஒருநாள் மனதளவில் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு தனது குடும்பத்தினரிடம் விஷயத்தைக் கூறினார். அவர்களது வற்புறுத்தலின் பேரில் அவர் போலீசாரிடம் சென்றார். ஆனால் இத்தனைக்கும் நடுவில் ரிம்ஜிம் மன அழுத்தத்தினுள் மூழ்கிக் கொண்டிருந்தார்.

"இந்த வழக்கு அதிகபட்சம் ஓராண்டு வரை நீடிக்கும் என்று நான் நினைத்தேன். ஆனால், அதையும் தாண்டிப் பல ஆண்டுகளுக்கு நீண்டு கொண்டே சென்றது. அதனால் நான் மன உளைச்சலுக்கு ஆளானேன்" என்று கூறுகிறார் அவர்.

ஆணாதிக்க சமூகத்தில் வெளியுலகில் காணும் சக்தி இணையதளத்திலும் காணப்படுவதாக மருத்துவ உளவியலாளர் டாக்டர். பூஜா சிவம் ஜெட்லி கூறுகிறார். இணைய வெளியில், தாங்கள் யாரிடமும் எதையும் சொல்லலாம் என்று மக்கள் நினைக்கிறார்கள்.

"அங்கு ஒரு பெண் தனது வேலையைப் பற்றிப் பேசினாலும், அவர் பாலியல் மற்றும் பாடி ஷேமிங் கருத்துகளுக்கு உள்ளாவதை மிக அதிகமாகப் பார்க்க முடிகிறது. குறிப்பாக பதின் பருவப் பெண்கள் இதற்கு அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்" என்று கூறுகிறார் அவர்.

"பெரும்பாலும் பதின்பருவ பெண்கள் இதுபோன்ற நேரங்களில் என்னிடம் உதவி தேடி வருகிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை டிஜிட்டல் உலகம் அவர்கள் அதிக நேரத்தைச் செலவிடும் ஒன்றாக உள்ளது. அங்கு அவர்கள் துன்புறுத்தல், கொடுமைப்படுத்தப்படுதல் போன்ற பிரச்னைகளை எதிர்கொண்டால், அவர்கள் ஒரு நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். யாரிடம் உதவி கேட்பது, என்ன செய்வது என்ற குழப்பம் இருக்கிறது. அதுமட்டுமின்றி, அந்த டிஜிட்டல் உலகிலிருந்து வெளியேறினால், அவர்கள் தம் நட்பு வட்டத்தில் இருந்து துண்டிக்கப்படுவதாக நினைக்கிறார்கள். இது அவர்களை மேலும் சிக்கலில் தள்ளுகிறது" என்று பூஜாசிவம் ஜெட்லி கூறுகிறார்.

இதை சமாளிப்பதற்கான சில வழிகளை மருத்துவர் பூஜாசிவம் ஜெட்லி பரிந்துரைத்தார்.

சம்பந்தப்பட்ட நபர்களை முற்றிலுமாகத் தவிர்ப்பதும், ப்ளாக் செய்வதும் ஒரு நல்ல தீர்வு.

அத்தகைய விஷயங்களை மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்வது, ஓர் ஆதரவை வழங்கும்.

சில நேரங்களில் டிஜிட்டல் வெளியில் சிலர் பல பிரச்னைகளைச் சந்திக்க நேரிடும். அப்படிப்பட்ட சூழ்நிலையில், சிறிது காலம் அதிலிருந்து வெளியேறி விடுவதும் ஒரு நல்ல தீர்வுதான். அதன்மூலம் மன அமைதியைப் பேண முடியும்.

நீங்கள் வசதியாக உணரும் விஷயங்களை மட்டும் பகிரவும்.

சமூக ஊடக கணக்கைத் தனிப்பட்டதாக, உங்கள் வட்டத்திற்கு உள்ளேயே வைத்திருப்பதும் ஒரு சிறந்த வழி.

ஒரு குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட பயன்பாட்டைக் கடைபிடிப்பது நல்லது.

ஏதேனும் ஒன்று மனதளவில் தொடர்ந்து தொந்தரவு செய்தால், அதைப் பார்க்கும் சூழலில் இருந்து வெளியேற வேண்டும். அதைத் தொடர்ந்து பார்ப்பது, அதிக எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்துகிறது.

தேவையான நேரத்தில் முறையான உதவிகளை நாட வேண்டும்.

# டிஎன்பிஎஸ்சி, எஸ்எஸ்சி போட்டி தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் - அரசு அறிவிப்பு!



படித்த இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெறும் வகையில் டிஎன்பிஎஸ்சி, எஸ்எஸ்சி, ஐபிபிஎஸ், ஆர்ஆர்பி போட்டித் தேர்வுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் குறித்த அறிவிப்பை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.

இது குறித்து அரசு சார்பில் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில், "டிஎன்பிஎஸ்சி, எஸ்எஸ்சி, ஐபிபிஎஸ், ஆர்ஆர்பி ஆகிய முகமைகள் நடத்தும் போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆர்வலர்களுக்கு தமிழக அரசின் சார்பில் இயங்கும் போட்டித் தேர்வுகள் பயிற்சி மையங்களால் கட்டணமில்லாப் பயிற்சி வகுப்புகள், சென்னை, பழைய வண்ணாரப்பேட்டையில் உள்ள சர் தியாகராயா கல்லூரி வளாகத்தில் 500 ஆர்வலர்களுக்கும் மற்றும் சென்னை, சேப்பாக்கத்தில் உள்ள மாநிலக் கல்லூரி வளாகத்தில் 300 ஆர்வலர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேற்படி போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளும் ஆர்வலர்களுக்கான பயிற்சி வகுப்புகளுக்கு இணையவழியாக விண்ணப்பங்கள் பெற்று, புதிதாக சேர்க்கை நடைபெற உள்ளது. பயிற்சி வகுப்புகள் பிற்பகல் 2.00 மணி முதல் 5.00 மணி வரை ஆறு மாத காலம் வாராந்திர வேலை நாட்களில் நடைபெற உள்ளது. பயிற்சி வகுப்புகளில் சேர விரும்பும் ஆர்வலர்கள் குறைந்த பட்சம் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருப்பதோடு 01—01—2024 அன்று 18 வயது பூர்த்தி செய்திருக்க வேண்டும். மேற்படி போட்டித் தேர்வுகள் பயிற்சி மையங்களில் உணவு மற்றும் தங்கும் வசதிகள் இல்லை.

பயிற்சியில் சேர விரும்பும் ஆர்வலர்கள் போட்டித் தேர்வுகள் பயிற்சி மைய இணையதளம் www.cecc.in வாயிலாக 10.09—2024 முதல் 24.09.2024 வரை விண்ணப்பிக்கலாம். பயிற்சி வகுப்புகளில் சேர்க்கை தொடர்பான கூடுதல் விவரங்களை மேற்குறிப்பிட்ட இணையதள முகவரியில் பார்த்து தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு 044—25954905 மற்றும் 044—28510537 ஆகிய தொலைபேசி எண்களைத் தொடர்பு கொள்ளலாம்.

பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் தமிழக அரசால் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள இனவாரியான இடங்களுக்கு ஏற்ப ஆர்வலர்கள் தெரிவு செய்யப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் விவரங்கள் மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் வெளியிடப்படும். அக்டோபர் மாதம் இரண்டாம் வாரத்தில் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



**5.9.2024 அன்று சென்னை வண்டலூர், பி.எஸ்.அப்துல்ரகுமான் கிரசன்ட் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனக் கூட்டரங்கில் பள்ளிக்கல்வித் துறை சார்பில் நடைபெற்ற விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு ஆசிரியர்களுக்கு டாக்டர் ராதாகிருஷ்ணன் விருதுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், அன்பில் மகேஷ்பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் கா.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி மற்றும் அரசு அதிகாரிகள் அலுவலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.**

# சென்னை மற்றும் புறநகரில் குத்தகைக்கு வீடு தேடுபவர்களை குறிவைத்து நடைபெறும் நூதன மோசடி! - எப்படி நடக்கிறது?

"சென்னைதான் எங்களுக்கு பூர்வீகம். பொண்ணுக்கு கல்யாண ஏற்பாடுகள் நடந்ததால் பெரிய வீடு வேணும்னு ரூ.23 லட்சம் குத்தகை கொடுத்து இந்த வீட்டுக்கு வந்தோம். இப்ப லோன் சரியா கட்டலைன்னு வீட்டை ஜப்தி பண்ணிட்டாங்க. வீட்டு ஓனர் எங்கேன்னு தெரியலை. எங்களோட மொத்த சேமிப்பும் அந்தப் பணம்தான்" — தான் குடியிருந்த வளசரவாக்கம் வீட்டின் வாசலில் அமர்ந்தபடியே அழுகிறார் துர்கா தேவி.

கோடம்பாக்கத்தில் வசிக்கும் ஜெகன், குன்றத்தூர் அருகில் ஆறு லட்ச ரூபாயை கொடுத்து ஒரு வீட்டை குத்தகைக்கு எடுத்து குடியேறினார். அவரும் துர்கா தேவியை போலவே பிரச்னையை எதிர்கொண்டதாக வேதனைப்பட்டார்.

இதுபோன்ற மோசடிகள் நடப்பதாக பல புகார்கள் வந்திருப்பதால் காவல் துறை சார்பில் விழிப்புணர்வு முகாம்களை நடத்தி வருவதாகக் கூறுகிறார் தாம்பரம் காவல் துணை ஆணையர்.

"வளசரவாக்கத்தில் எங்கள் வீட்டின் உரிமையாளராக இருந்தவர் வீட்டின் பேரில் வாங்கிய கடனுக்கான தவணையை சரியாக செலுத்தவில்லை. இதனால் வங்கியில் இருந்து ஆட்கள் வரத் தொடங்கினர். ஒருகட்டத்தில் வீட்டின் கதவில் நோட்டீஸ் ஒட்டினர். அதன் பிறகு தான், வீட்டின் பேரில் அவர் 88 லட்ச ரூபாய் கடன் வாங்கியுள்ளது தெரியவந்தது", என்கிறார் துர்கா தேவி.

ஒருகட்டத்தில், வீட்டைக் காலி செய்யுமாறு வங்கித் தரப்பில் இருந்து துர்காவுக்கு நெருக்கடிகள் வந்துள்ளன.

"வீட்டு உரிமையாளரின் மனைவி உள்பட அவரது உறவினர்களிடம் பேசியும் உரிமையாளர் குறித்த எந்த தகவலும் தெரியவில்லை. இந்நிலையில், ஆகஸ்ட் 27 அன்று வீட்டை தனியார் வங்கி நிர்வாகம் ஜப்தி செய்துவிட்டது" என்கிறார், துர்கா தேவி

இதன்பிறகு வளசரவாக்கம் காவல்நிலையத்தில் துர்கா தேவி தரப்பில் புகார் கொடுக்கப்பட்டது. அப்போது நடந்த விசாரணையில் மேலும் சில இடங்களில் இதேபோல் அந்த நபர் மோசடி செய்திருப்பது தங்களுக்குத் தெரியவந்ததாக பிபிசி தமிழிடம் துர்கா தேவி குறிப்பிட்டார்.



இவரைப் போலவே, தனியார் மருந்து நிறுவனத்தில் வேலை பார்க்கும் ஜெகன் என்பவர், 2020 ஆம் ஆண்டில் குன்றத்தூர் அருகில் உள்ள கோவூரில் அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் ஆறு லட்ச ரூபாய்க்கு குத்தகைக்கு சென்றுள்ளார்.

"ஒரு வங்கியில் இருந்து வாங்கிய வீட்டுக் கடனை வீட்டின் உரிமையாளர் செலுத்தாததால் வீடு ஜப்தி செய்யப்பட்டது" என்று கூறும் ஜெகன் தான் கொடுத்த பணத்தில் 2 லட்ச ரூபாய் மட்டுமே திரும்ப கிடைத்ததாக தெரிவித்தார்.

"என்னுடைய வீட்டு உரிமையாளர் கொடுத்த காசோலை திரும்பி வந்துவிட்டதால் (cheque bounce) சட்டப்படி நடவடிக்கை எடுக்க தயாராகி வருகிறேன்" என்கிறார் ஜெகன்.

### மோசடி செய்த நபர் கைது

இதே பாணியிலான மோசடி கிழக்கு தாம்பரத்தில் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் நடந்தது. 'வாடகை மற்றும் வீடு குத்தகைக்குக் கிடைக்கும்' என விளம்பரம் செய்து 'சென்னை ஹோப்ஸ் ஈவன்ட் மேனேஜ்மென்ட்' என்ற கம்பெனி செயல்பட்டு வந்துள்ளது.

இதனை நடத்தி வந்த பிரேம்பாபு என்ற நபரை போலீஸ் கைது செய்தது. இவர்களின் விளம்பரத்தை நம்பி 8.5 லட்ச ரூபாயை கொடுத்து ஏமாந்துவிட்டதாக முகமது பாரூக் என்பவர் அளித்த புகாரின் பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### காவல்துறை கூறியது என்ன?

"வீடுகளில் குத்தகைக்கு செல்பவர்கள் சார்—பதிவாளர் அலுவலங்களில் முறையாக பதிவு செய்யப்படாததுதான் இதுபோன்ற மோசடிகளுக்குக் காரணம். இதுபோன்ற மோசடிகள் நடக்காத வண்ணம் தடுக்க பொதுமக்களை எச்சரிக்கும் வகையில் சைபர் கிரைம் போலீஸுடன் இணைந்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறோம். தாம்பரம் மற்றும் சுற்றுவட்டாரத்தில் உள்ள குடியிருப்புகளில் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இந்த நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன"" என்கிறார், தாம்பரம் காவல் துணை ஆணையர் பவன்குமார் ரெட்டி.

### தீர்வு என்ன?

"குத்தகை ஒப்பந்தம் என்பது ஒரு பெரிய தொகையை பெற்றுவிட்டு வீட்டை கொடுப்பது. வீட்டைக் காலி செய்யும் போது பணத்தை திருப்பிக் கொடுக்க வேண்டும். இதை முறையாக பத்திரப்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்தால் எந்த சிக்கலும் வரப் போவதில்லை" என்கிறார், வழக்கறிஞர் சரவணன் கார்த்திகேயன்.

குத்தகை ஒப்பந்தத்தைப் பதிவு செய்வதற்கு 1 சதவீத முத்திரை தீர்வையும் (stamp duty) 1 சதவீதம் பதிவுக் கட்டணமும் செலுத்த வேண்டும் என்கிறார் அவர்.

"கார்பரேட் நிறுவனங்கள், ஷாப்பிங் மால்கள், தனியார் வங்கிகள் போன்றவை பத்திரப் பதிவு அலுவலகம் வந்து முறையாக பதிவு செய்கின்றன. இவ்வாறு பதிவு செய்தால்தான் காப்பீடு கிடைக்கும் என்பது பிரதான காரணமாக உள்ளது" என்கிறார்

இதுபோன்ற மோசடிகளில் இருந்து தப்பிக்க சில எளிய வழிகளையும் அவர் முன்வைக்கிறார்.

ஒருவர் தான் குத்தகைக்கு செல்வதை பத்திரப்பதிவு அலுவலகம் மூலமாக பதிவு செய்யும்போது அந்த வீடு வங்கிக் கடனில் இருப்பது தெரியவரும்.

வங்கிக் கடன் முறையாக செலுத்தப்பட்டுள்ளதா? வீட்டின் மீது வேறு ஏதேனும் வில்லங்கம் இருக்கிறதா? என்பது தெரியவரும்.

வங்கியில் இருந்து வீட்டின் உரிமையாளர் பெயரில் தடையில்லா சான்று கொடுத்தால்தான் பத்திரப்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்ய முடியும்.

ஓராண்டுக்கு மேற்பட்ட வாடகை அல்லது குத்தகை ஒப்பந்தத்தை முறையாக பதிவு செய்ய வேண்டும் என்பது பத்திரப்பதிவு விதி. அவ்வாறு பதியும்போது நீதிமன்றத்தில் நிவாரணம் தேடிக் கொள்ள ஏதுவாக இருக்கும்.

"முத்திரைத் தீர்வையாக செலுத்தும் தொகை குறைவாக இருந்தால் மக்கள் பதிவு செய்ய முன்வருவார்கள். பதிவுக்கு தனி கட்டணம், வில்லங்க சான்றுக்கு கட்டணம் என அரசு நிர்ணயித்துள்ளதால் பதிவு செய்வதற்கு மக்கள் ஆர்வம் காட்டுவதில்லை. வீட்டு உரிமையாளருடன் குத்தகைக்கு செல்வோர் எழுத்துப்பூர்வமாக இல்லாமல் வாய்மொழியாக பேசிக் கொள்வதால் குத்தகை முடிந்த பின்னர் பிரச்னை எழுகிறது. குத்தகை தொடர்பாக போடப்படும் பத்திரத்தையும் சிலர் புதுப்பிப்பதில்லை" என்கிறார் வீடு மற்றும் அடுக்குமாடி கட்டுவோர் சங்கங்களின் கூட்டமைப்பின் மாநில தலைவர் மணிசங்கர்.

புறநகரில் நடக்கும் குத்தகை மோசடிகள் குறித்து செங்கல்பட்டு மாவட்ட பதிவாளர் அறிவழகன் கூறுகையில், "குத்தகைக்கு அடிப்படையில் குடியேற செல்லும் முன்பாக முறையாக பதிவு செய்யப்பட்டால்தான் சட்டரீதியாக அது செல்லுபடியாகும். 11 மாதங்களுக்கு மேல் வாடகை அல்லது குத்தகை ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுகிறது என்றால் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும்" என்கிறார்

"குத்தகை தொடர்பான விழிப்புணர்வு மக்களுக்கு வரவேண்டும். இதுதொடர்பான மோசடிகள் குறித்தும் கோரிக்கைகள் குறித்தும் பதிவுத்துறை தலைவரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்படும்" என்கிறார், அறிவழகன்.



பாதிக்கப்பட்ட துர்கா தேவி குடும்பத்தினர் (வீட்டு உரிமையாளருடன் செய்து கொண்ட உடன்படிக்கையை கையில் வைத்துள்ளனர்)

# வழக்கறிஞர்களுக்கு நூலகம் முதுகெலும்பு போன்றது

## சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி டி.கிருஷ்ணகுமார் பெருமிதம்!




"வழக்கறிஞர்களுக்கு நூலகம் முதுகெலும்பு போன்றது. நூலகம் வழக்கறிஞர்களின் வளர்ச் சிக்கு உதவியாக இருக்கும்" என சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி டி.கிருஷ்ணகுமார் கூறியுள்ளார்.

உயர் நீதிமன்ற மதுரை அமர்வு வழக்கறிஞர்கள் சங்கத்தின் (எம்எம்பிஏ) புதுப்பிக்கப்பட்ட நூலகம் திறப்பு எம்எம்பிஏ தலைவர் மூத்த வழக்கறிஞர் ஐசக்மோகன்லால் தலைமையில் நடைபெற்றது. புதுப்பிக்கப்பட்ட நூலகத்தை தலைமை நீதிபதி டி.கிருஷ்ணகுமார் திறந்து வைத்தார்.

பின்னர் தலைமை நீதிபதி பேசுகையில், "மதுரையின் அடையாளம் மீனாட்சியம்மன் கோயில், ஜல்லிக்கட்டு, நீதிக்காக போராடிய சிலப்பதிகார கண்ணகி. அந்த பட்டியலில் உயர் நீதிமன்ற மதுரை அமர்வும் இடம் பெற்றுள்ளது. மதுரை மண் வீரம், சக்தி, நீதிக்கு பெயர் பெற்றது. முன்பு வழக்கறிஞர்களாக இருந்தவர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தான் வழக்கறிஞர்களாக வந்தனர். தற்போது 90 சதவீதம் முதல் தலைமுறை வழக்கறிஞர்கள் உள்ளனர். வழக்கறிஞர்களுக்கு நூலகம் முதுகெலும்பு போன்றது. வழக்கறிஞர் சங்கத்தின் டிஜிட்டல் நூலகம் அனைவருக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இதனால் நூலகத்தை அனைத்து வழக் கறிஞர்களும் தவறாமல் பயன்படுத்த வேண்டும். இதனால் வழக்கறிஞர்கள் தங்களை வளர்த்துக் கொள்ள முடியும்" என்று நீதிபதி கூறினார்.

இந்நிகழ்வில், உயர்நீதிமன்ற மதுரை அமர்வு நிர்வாக நீதிபதி ஆர்.சுப்பிரமணியன், நீதிபதிகள் சி.வி.கார்த்திகேயன், ஜி.ஆர்.சுவாமிநாதன், எஸ்.ஸ்ரீமதி, ஆர்.விஜயகுமார், முகமது ஷபீக், உதவி சொலிசிட்டர் ஜெனரல் கோவிந்த ராஜன், சங்க நிர்வாகிகள் எஸ்.வினோத், வழக்கறிஞர்கள் கு.சாமிதுரை, எம்.கே.சுரேஷ் உள்பட பலர் கலந்துகொண்டனர். சங்க பொதுச் செயலாளர் சரவணகுமார் நன்றி கூறினார்.

# கள்ளச்சாராயம் குடித்தவர்களுக்கு ரூ.10 லட்சம் கொடுத்த அரசிடம் சுவர் இடிந்து விழுந்த குழந்தைக்கு ரூ.5 லட்சம் கொடுக்க நிதி இல்லையா?

## இழப்பீட்டுக்கு எதிராக மேல் முறையீடு செய்த அதிகாரிக்கு ரூ.50 ஆயிரம் அபராதம் விதித்து கண்டித்த உயர்நீதிமன்றம்!



இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு முகாமில் சுவர் இடிந்து விழுந்த சிறுமி குடும்பத்துக்கு ரூ.5 லட்சம் இழப்பீடு வழங்கும் உத்தரவுக்கு எதிராக மேல்முறையீடு செய்த அதிகாரிக்கு ரூ.50 ஆயிரம் அபராதம் விதித்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மதுரை திருவாதவூரில் உள்ள இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு முகாமைச் சேர்ந்தவர் அதிபதி. இவரது 11 வயது மகள் சரண்யா, 6—ம் வகுப்பு படித்து வந்தார். இந்நிலையில், 2014 மே 12—ம் தேதி வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் சரண்யா உயிரிழந்தார். இதற்கு ரூ.10 லட்சம் இழப்பீடு கேட்டு, உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் அதிபதி வழக்கு தொடர்ந்தார்.

இதை விசாரித்த தனி நீதிபதி, “மறுவாழ்வு முகாமில் அரசு கட்டிக் கொடுத்த வீட்டின் சுவர் இடிந்து சிறுமி உயிரிழந்துள்ளார். இதற்கு அரசு தான் பொறுப்பேற்க வேண்டும். எனவே, சிறுமி குடும்பத்துக்கு ரூ.5 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும்” என்று உத்தரவிட்டார். இந்த உத்தரவை ரத்து செய்யக் கோரி அரசுத் தரப்பில் மேல்முறையீடு மனு தாக்கல் செய்யப்பட்டது. இதை நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், எல்.விக்டோரியா கௌரி அமர்வு விசாரித்தது.

பின்னர் நீதிபதிகள், “கள்ளக்குறிச்சியில் சட்ட விரோதமாக கள்ளச் சாராயம் குடித்து இறந்தவர்கள் குடும்பத்துக்கு ரூ.10 லட்சம் கொடுக்க அரசிடம் நிதி உள்ளது. ஆனால், சுவர் இடிந்து விழுந்து குழந்தை இறந்ததற்கு ரூ.5 லட்சம் இழப்பீடு கொடுக்குமாறு கூறினால், அதற்கு மனமில்லாமல், மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவை தாக்கல் செய்த அதிகாரிக்கு ரூ.50 ஆயிரம் அபராதம் விதிக்கப்படுகிறது. இந்தப் பணத்தை சிறுமியின் தந்தைக்கு வழங்க வேண்டும். மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது” என்று உத்தரவிட்டனர்.

# திருநாகேஸ்வரம் நாகநாதசுவாமி கோயில் கும்பாபிஷேகத்தில் ரூ.8 கோடிக்கு முறைகேடு!

திருநாகேஸ்வரம் நாகநாதசுவாமி கோயில் கும்பாபிஷேகத்தில் ரூ.8 கோடி அள வில் முறைகேடு நடந்திருப்பது தொடர்பான விசாரணையை அறநிலையத் துறை தொடர உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத் தைச் சேர்ந்த பாலா, உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: 'திருநாகேஸ் வரம் நாகநாதசுவாமி கோயில் கும்பாபிஷேகம் 2021—ம் ஆண்டில் நடந்தது. அப்போது பல் வேறு முறைகேடுகள் நடந்துள்ளன. இது குறித்து விசாரித்து கும்பாபிஷேக திருப்பணிக் குழு மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும்.' இவ்வாறு மனுவில் கூறப்பட்டி ருந்தது.

இந்த மனுவை விசாரித்து நீதிபதி பி.புக ழேந்தி பிறப்பித்த உத்தரவு: "நாகநாதசுவாமி கோயில் கும்பாபிஷேகத்தை யொட்டி ரூ.8 கோடி வரை முறைகேடு நடந்ததாக குற்றச் சாட்டு வைக்கப்பட்டு உள்ளது. பக்தர்களின் பணம் ஒரு ரூபாயைக்கூட முறைகேடு செய்வ தற்கு அறநிலையத்துறை அனுமதிக்கக்கூடாது. இந்த விவகாரத்தில் 2 குருக்கள் இடமாற்றம் செய்யப்பட்டதற்கு எதிராக மட்டுமே வழக்கு தொடரப்பட்டு உள்ளது.






இதில் நீதிமன்றம் பிறப்பித்த தடை யாணை, அறநிலையத்துறை அதிகாரிகள் விசா ரணையை தடுக்காது. எனவே அதிகாரிகள் தங்களின் விசாரணையை தொடர்ந்திருக்க வேண்டும். ஆனால் இது கிடப்பில் போடப் பட்டுள்ளது. எனவே கோயில் கும்பாபிஷேக வரவு, செலவு தணிக்கை அறிக்கையை பெற்று, சம்பந்தப்பட்டவர்கள் விளக்கம் அளிக்க வாய்ப்பு அளித்து அறநிலையத் துறை ஆணையர் 4 வாரத்தில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இதில் ஏதேனும் தாமதம் ஏற்பட்டால், அது மற்றவர்களையும் முறை கேடுகளில் ஈடுபட ஊக்குவிப்பதாக அமையும் என்பதால் விரைவான நடவடிக்கையை எடு க்க வேண்டும்" என்று நீதிபதி உத்தரவிட்டார்.

# குற்றாலநாதர் கோயில் கடைகளுக்கான வாடகை பாக்கியை வசூலிப்பதில் தாமதம் கூடாது!



குற்றாலம் குற்றாலநாதர் கோயில் கடைகளுக்கான வாடகை பாக்கியை வசூல் செய்வதில் சமாதான பேச்சுவார்த்தை நடைபெறுவதாக தாமதம் செய்யக் கூடாது என உயர் நீதிமன்ற மதுரை கிளை உத்தர விட்டுள்ளது.

தென்காசி மாவட்டம் குற்றால அருவிக ளில் குளிக்க வரும் சுற்றுலா பயணிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்யக் கோரி மதுரை வழக்கறிஞர் கிருஷ்ணசாமி, 2014—ல் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் பொதுநல மனு தாக்கல் செய்தார்.இந்த மனு விசாரணைக்கு வந்தபோது வழக்கறிஞர்கள் ஆணையர்கள் நியமிக்கப்பட்டு குற்றாலத்தில் ஆய்வு நடத்தப்பட்டது. பின்னர் குற்றாலத்தில் அடிப்படை வசதிகள் செய்யவும், எண்ணெய் மசாஜ், சோப்பு ஷாம்பு பயன்படுத்த தடை விதித்தும், குற்றாலம் ஊருக்குள் செயல்பட்ட டாஸ்மாக் கடைகளை ஊருக்கு வெளியே மாற்றவும் என்பது உட்பட 43 உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

இந்நிலையில், இந்த மனு நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், எல்.விக்டோரியா கவுரி அமர்வில் விசாரணைக்கு வந்தது. பின்னர் நீதி பதிகள், "குற்றாலம் குற்றாலநாதர் கோயிலுக்கு சொந்தமான கடைகளுக்கான நிலுவை வாடகை பாக்கியை கோயில் செயல் அலு வலர் வசூலிக்க வேண்டும். கோயில் கடைக ளுக்கான வாடகையை வசூலிப்பதில் பிரச் சினை ஏற்படுவதால் அமைதி பேச்சுவார்த்தை நடத்தப்படுவதாக கூறுகின்றனர்.

அமைதி பேச்சு வார்த்தை என்ற பெயரில் கட்டப்பஞ்சாயத்து நடைபெறுவதையும், சமாதான பேச்சுவார்த்தை என்று கூறி காலம் தாழ்த்துவதையும் ஏற்க முடியாது.எனவே குற்றாலநாதர் கோயிலுக்கு சொந்தமான கடைகளில், வாடகை நிலுவை தொகையினை கோயில் செயல் அலுவலர் சட்டபடி வசூ லிக்க வேண்டும். இது குறித்து செயல் அலு வலர் பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும். விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது என உத்தரவிட்டனர்.

# கல்வித்தகுதி மாற்றியமைப்பு! வயது வரம்பும் நிர்ணயம்!

## குரூப்-1 தேர்வுடன் தொழிலாளர் நல உதவி ஆணையர் தேர்வு இணைப்பு!




இதுவரை சிறப் புத் தேர்வாக நடத்தப் பட்டு வந்த தொழிலா ளர் நலத்துறை உதவி ஆணையர் தேர்வு, குரூப்—1 தேர்வு டன் இணைக்கப்பட்டுள்ளது. அதோடு அடிப்படை கல்வித்தகுதியும் மாற் றப்பட்டு வயது வரம் பும் நிர்ணயிக்கப்பட் டுள்ளது.

வருவாய் கோட் டாட்சியர் (துணை ஆட்சியர்) டிஎஸ்பி, ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர், வணிகவரி உதவி ஆணையர் , கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவ ட்ட பத்திரப்பதிவு அலுவலர், மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் அலு வலர் ஆகிய 8 விதமான உயர் பதவிகளை நேரடியாக நிரப்பு வதற்காக டிஎன்பிஎஸ்சி குரூப்—1 தேர்வு நடத்தப் படுகிறது. இதே அந்தஸ்துள்ள உதவி வனப்பாது காவலர் பணிக்கு குரூப்—1—ஏ தேர்வும், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை உதவி ஆணையர் பதவிக்கு குரூப்—1—பி தேர்வும், மாவட்ட கல்வி அதிகாரி பணிக்கு குரூப்—1—சி தேர்வும் தனித் தனியாக நடத்தப்படுகின்றன. இவை தவிர, குரூப்—1 அந்தஸ்துடைய தொழிலாளர் நலத்துறை உதவி ஆணையர் தேர்வு சிறப்புத் தேர்வாக நடத்தப்பட்டு வருகிறது.

இதற்கு தொழிலாளர் சட்டம் தொடர் பான முதுகலை படிப்பு அல்லது பட்டப்படிப்பு அல்லது ஏதேனும் ஒரு பட்டப்படிப்புடன் தொழி லாளர் சட்டம் தொடர்பான டிப்ளமா அல்லது முதுகலை டிப்ளமா படித்திருக்க வேண்டும். அதே சமயம் குரூப்—1 தேர்வெழுத ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு படித்திருந்தாலே போதும். இந்நிலையில், இதுவரை சிறப்புத் தேர்வாக நடத்தப்பட்டு வந்த தொழிலாளர் நலத் துறை உதவி ஆணையர் தேர்வு, குரூப்—1 தேர்வுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதற் கான அரசா ணையை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை செயலர் கொ.வீரராகவராவ் வெளியிட்டுள்ளார்.

இந்த அரசாணையின்படி, தொழிலா ளர் நலத்துறை உதவி ஆணையர் தேர்வுக்கு தற்போது நடைமுறையில் இருந்து வரும் அடிப்படை கல்வித் தகுதி (தொழிலாளர் நலன் பட்டப்படிப்பு அல்லது ஏதேனும் ஒரு பட்டப்படிப்புடன் தொழி லாளர் நலன் டிப்ளமா படிப்பு) மாற்றியமைக்கப் பட்டுள்ளது. இத்தேர்வு குரூப்—1 தேர்வுடன் இணைக்கப்படுவதால் இதற்கும் ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு படித்திருந்தால் போதும்.

மேலும், முன்பு பொதுப்பிரிவினருக்கு வயது வரம்பு 30 ஆக இருந்தது. இட ஒதுக்கீட்டுப் பிரிவினருக்கு (பிசி, எம்பிசி, எஸ்சி, எஸ்டி) வயது வரம்பு கிடையாது. ஆனால், தற்போது குரூப்—1 தேர்வுடன் இத்தேர்வு இணைக்கப்பட்டுள்ள தால் குரூப்—1 தேர்வுக்கான வயது வரம்பு கட்டுப் பாடு இதற்கும் பொருந்தும். குரூப்—1 தேர்வில் வயது வரம்பு பொதுப்பிரிவின ருக்கு 34 ஆகவும், இடஒதுக்கீட்டுப் பிரிவினருக்கு 39 ஆகவும் நிர்ண யிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### தேர்வர்கள் வேண்டுகோள்:

டிஎன்பிஎஸ்சி வருடாந்திர தேர்வு அட்ட வணையில் கடந்த 2 ஆண்டுகளாக தொழிலாளர் நலத்துறை உதவி ஆணையர் தேர்வு இடம்பெற் றும் பின்னர் அதிலிருந்து நீக்கப்பட்டு தேர்வு நடத்தப்படவில்லை. இத்தேர்வை எதிர்பார்த்து தொழிலாளர் சட்டம் தொடர்பான முதுகலை பட்டப்படிப்பு படித்தவர்களும், தொழிலாளர் சட்டம் தொடர்பான டிப்ளமா படிப்பை படித்த பட்டதாரிகளும் படித்து வருகின்ற னர். இந்நிலை யில், இத்தேர்வு திடீரென குரூப்—1 தேர்வுடன் இணைக்கப்பட்டு வயது வரம்பும் கொண்டு வரப் பட்டிருப்பதால் அவர்கள் அதிர்ச்சி அடைந் துள்ளனர். இதுகுறித்து அவர்கள் கூறும்போது,

"உதவி ஆணையர் தேர்வை எதிர் பார்த்து கடந்த 2 ஆண்டுகளாக படித்து வருகிறோம். முன்பு இடஒதுக்கீட்டு பிரிவினருக்கு வயது வரம்பு கிடையாது. தற்போது வயது வரம்பு 39 என நிர்ணயிக்கப்பட்டிருப்பதால் 39 வயது கடந்த வர்கள் இத்தேர்வுக்கு விண்ணப்பிக்க முடியாது. தொழிலாளர் சட்டம் படித்தவர்களுக்கு வயது வரம்பில் தளர்வு அளிக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் வயது வரம்பு தளர்வை குறைந்தபட்சம் ஒருமுறையாவது வழங்க வேண் டும். நாங்கள் எங்களுக்கு வேலை கேட்கவில்லை. வேலைக்கான தேர்வை எழுதுவதற்கு வாய்ப்பு தாருங்கள் என்றுதான் கேட்கிறோம். எனவே, எங்க ளின் நியாயமான கோரிக்கையை தொழி லாளர் நலத்துறை கனிவுடன் பரிசீலிக்க வேண்டு கிறோம்" என்றனர்.

# கன்னியாகுமரி மாவட்டத்தில் நாளுக்கு நாள் அதிகரிக்கும் கனிமவளக் கொள்ளை!

## நிலச்சரிவு ஏற்படும் அபாயம் உள்ளதாக பொதுமக்கள் அச்சம்

குமரி மாவட்ட மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் அத்துமீறி அழிக்கப்படும் மலைக் குன்றுகளால் நிலச் சரிவு ஏற்படும் அபாயம் இருப்பதாக அப் பகுதி மக்கள் அச்சம் தெரிவிக்கிறார்கள்.



கன்னியாகுமரி மாவட்டம் நீண்ட மேற்கு தொடர்ச்சி மலைகளையும், குன்றுகளையும் அடங்கிய மாவட்டம். இதனால் தான் இங்கு கேரளாவை போன்று மழை பொழிவு அதிகம் இருப்பதுடன் இயற்கை செழிப்புடன் விவசா யமும் சிறந்தோங்குகிறது. அதேசமயம் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் சில குவாரிக ளில் மட்டும் அனுமதி பெற்றுவிட்டு நூற்றுக் கும் மேற்பட்ட இடங்களில் மலைகளை பெயர்த்து கல், ஜல்லி மற்றும் கனிமவளங்கள் கடத்தப்படும் அத்துமீறல்களும் இங்கே நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் இன்னும் 20 ஆண்டுகளுக்குள் குமரி மாவட்ட மும் வறட்சியின் பிடியில் சிக்கும் அபாயம் உள்ளது.

ஆனால், இதை உணராமல், யுனஸ்கோ வால் பாதுகாக்கப்பட்ட மலைப்பகுதிகள் என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளில் பாறை கள், மற்றும் கனிமவளங்களை பெயர்த்து எடுப்பதற்கு கனிமவளத்துறை அனுமதி அளித்து வருவது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது. கனிமவள கொள்ளைக்கு துணபோனதாக சமீபத்தில் குமரி மாவட்ட நிர்வாகம் மற்றும் கனிமவள அதிகாரிகளுக்கு உயர் நீதிமன்றம் கடும் கண்டனத்தை தெரிவித் ததுடன் ரூ.10 லட்ச அபராதமும் விதித்தது.

கனிமவள கொள்ளைக்கு கடும் எச்ச ரிக்கை மணியாக இது அமைந்த பின்னரும் தொடர்ந்து குமரி மாவட்டத்தில் இருந்து கேரளாவுக்கும், பிற பகுதிகளுக்கும் தினமும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட டாரஸ் லாரிகளில் பாறைகள் உடைத்து கொண்டு செல்லப்படு கிறது. நான்கு வழிச் சாலை பணிகளுக்கு திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் இருந்து மணல் கொண்டு வருவதற்கான முயற்சிகள் நடந்தன. ஆனால் அதன் பின்னர் நான்கு வழிச் சாலை பணிகளுக்கு எனக்கூறி மீண்டும் குமரி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் சட்டவிரோதமாக மலைகளையும், மலைக்குன்றுகளையும் அழிக்கும் முயற்சி நடைபெறுகிறது.

குறிப்பாக, திருவட்டாறு அருகே கல்லுப் பாலம் பகுதியில் மக்கள் நெருக்கம் மிகுந்த பகுதியில் உள்ள மலைக் குன்றை உடைத்து பாறைகள் மற்றும் மண் என அனைத்தையும் எடுத்துச் செல்வதற்கான முயற்சி நடந்து வருகிறது. இந்த மலைக்குன்றுகள் அழிந்தால் அப்பகுதியில் வயநாடு போன்ற நிலச்சரிவு ஏற்படும் அபாயம் ஏற்படலாம் என்று அங்குள்ள மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

நான்கு வழி சாலை பணிக்கு நெல்லை மாவட்டத்தில் இருந்து மண் கொண்டு வருவ தற்கு ஒப்பந்ததாரர்கள் அனுமதி பெற்றுவிட்டு தற்போது குமரி மாவட்டத்தில் அதிகாரிகளின் துணையோடு கனிமவள கொள்ளையில் ஈடுபட்டு வருவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டி வருகின்றனர். குமரி மாவட்டத்தில் ஏற்கனவே பொறுப்பில் இருந்து இடமாறுத லாகி சென்ற உயர் அதிகாரிகள் கல்குவாரி களுக்கு சட்டவிரோதமாக அனுமதி அளித்துச் சென்றதாக தற்போது பரபரப்பு ஏற்பட் டுள்ளது.

குமரி மாவட்டம் திருவட்டாறு அருகே கல்லுப்பாலம் பகுதியில் இதுவரை பாதுகாப் பாக இருந்த மலைக்குன்றுகளில் இருந்து மண், கற்களை அகற்றும் பணி துவங்கியுள்ளது.

குறிப்பாக, நட்டாலம் பகுதியில் செயல் பட்டு வந்த கல்குவாரிக்கு சட்டவிரோதமாக அனுமதி கொடுத்ததாக கூறி அனுமதி அளித்த அதிகாரிகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. தற்போது அப்பகுதியில் இருந்தும் கனிமவளங்கள் கடத்தப்படுகிறது. இந்நிலையில், கஸ்தூரி ரங்கன் கமிட்டி அறிக் கைப்படி மேற்கு தொடர்ச்சி மலைகளை பாது காக்க பாதுகாக்கப்பட்ட மலைப்பகுதிகள் என்று அறிவிக்கப்பட்ட இடங்களில் சட்ட விரோதமாக கொடுக்கப்பட்ட கனிமவளங்கள் வெட்டி எடுப்பதற்கான அனுமதியை ரத்து செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் திருவட்டாறு அருகே கல்லுப் பாலம் மற்றும் பள்ளியாடி அருகே முருங்கை விளை உட்பட பல இடங்களில் கொடுக்கப் பட்டுள்ள மலைக் குன்றுகளை வெட்டு எடுப்பதற்காக தரப்பட்டுள்ள அனுமதிகளை ரத்து செய்து குமரி மாவட்டத்தின் இயற்கை



வளங்களை பாதுகாக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# அதிகரிக்கும் மாணவர் தற்கொலைகள்-வெளியான அதிர்ச்சி தகவல்!



தருமபுரியைச் சேர்ந்த பிளஸ் 1 மாணவர் அவர். அவரது பெற்றோர் விவசாயக் கூலிகளாக வேலை செய்கிறார்கள். ஆன்லைன் விளையாட்டில் அவருக்கு ஏற்பட்ட ஆர்வம், நாளொன்றுக்கு 18 மணிநேரம் அதை விளையாடும் அளவுக்குச் சென்றுள்ளது. விளைவு, படிப்பில் கவனம் செலுத்த முடியாமல் மனச்சோர்வுக்கு ஆளாகியுள்ளார்.

"என்னையே நான் வெறுக்கிறேன். மொத்தமாக வீணா போயிட்டேன். நான் இருந்து என்ன ஆகப் போகிறது?" என சக நண்பர்களிடம் பேசி வந்தவர், இரண்டு முறை தற்கொலை முயற்சியிலும் ஈடுபட்டுள்ளார்.

"அந்த மாணவர், உளவியல் ரீதியான முரண்பாடுகளுக்கு (conflict) ஆட்பட்டிருந்தார். மனச்சோர்வு மருந்துகளைக் கொடுத்து உரிய கவுன்சிலிங் கொடுத்த பிறகு இயல்பு நிலைக்குத் திரும்பிவிட்டார்" என்கிறார், சேலத்தைச் சேர்ந்த மனநல மருத்துவர் மோகன வெங்கடாசலபதி.

தற்கொலை முடிவில் இருந்து தருமபுரி மாணவர் பின்வாங்கியது வரவேற்கக்கூடிய நிகழ்வு என்றாலும், நாடு முழுவதும் மாணவர் தற்கொலை தொடர்பாக வெளியான தரவுகள் அதிர்ச்சியூட்டக் கூடியவையாக உள்ளன.

மாணவர் தற்கொலைகளில் மகாராஷ்டிரா, மத்தியபிரதேசம் ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக தமிழ்நாடு உள்ளதாக ஐசி3 என்ற தொண்டு நிறுவனம் வெளியிட்ட ஆய்வறிக்கை கூறுகிறது. குறிப்பிட்டச் சில மாநிலங்களில் மட்டும் மாணவர் தற்கொலைகள் அதிகரிப்பது ஏன்?

### 10 ஆண்டுகளில் 57 சதவீதமாக அதிகரிப்பு

'மாணவர் தற்கொலை: இந்தியாவில் பரவும் தொற்றுநோய்' (Student Suicides: An Epidemic Sweeping India) என்ற தலைப்பில் கடந்த ஆகஸ்ட் 28—ஆம் தேதி இந்த ஆய்வறிக்கையை ஐசி3 வெளியிட்டது. தேசியக் குற்ற ஆவணக் காப்பகத்தின் (NCRB) தரவுகளின் அடிப்படையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டதாக ஐசி3 கூறுகிறது.

அதில், இந்தியாவில் கடந்த 10 ஆண்டுகளில் (2012 முதல் 2021) 97,571 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இது 2002 முதல் 2011 வரையிலான தரவுகளை ஒப்பிடும்போது இந்த எண்ணிக்கை 57 சதவீதத்தை எட்டியிருக்கிறது.

கடந்த 2022—ஆம் ஆண்டு மட்டும் 13,089 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இது 2021—ஆம் ஆண்டை ஒப்பிடும் போது 4.5% அதிகம். 2020—ஆம் ஆண்டில் 2019—ஆம் ஆண்டைக் காட்டிலும் 21.2% அளவு தற்கொலைகள் அதிகரித்துள்ளன.

கடந்த 10 ஆண்டுகளில், 24 வயதுக்குட்பட்டவர்களின் மக்கள்தொகை 58.2 கோடியில் இருந்து 58.1 கோடியாகக் குறைந்துள்ளது. ஆனால், மாணவர் தற்கொலை என்பது 7,696 முதல் 13,089 ஆக அதிகரித்துள்ளது.

மாணவர் தற்கொலை விகிதம் 4% முதல் 7% உயர்ந்துள்ளது. ஒட்டுமொத்த தற்கொலை விகிதம் ஆண்டுதோறும் 2% உயர்ந்து கொண்டே செல்கிறது. குறிப்பாக, கடந்த 5 ஆண்டுகளில் இது 5% ஆக உயர்ந்துள்ளது என அந்த அறிக்கை கூறுகிறது.

### 207% உயர்ந்த தற்கொலைகள்

இந்தப் பட்டியலில் மகாராஷ்டிரா முதலிடத்தில் உள்ளது. கடந்த ஆண்டு, மகாராஷ்ட்ராவில் 1,834 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். மத்திய பிரதேசத்தில் 1,308 பேரும், தமிழ்நாட்டில் 1,246 பேரும் கர்நாடகாவில் 855 பேரும் ஒடிஷாவில் 834 பேரும் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

நாட்டில், தற்கொலை செய்துகொண்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கையில் இந்த மாநிலங்களில் பதிவானது மட்டும் 46% என ஐசி3 அறிக்கை கூறுகிறது. அதேநேரம், மக்கள்தொகை அதிகம் உள்ள உத்தரபிரதேசத்தில் மிகக் குறைவான தற்கொலைகள் பதிவாகியுள்ளன. அங்கு 5.3% பதிவாகியுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் ஜார்க்கண்டில் 207% அளவு மாணவர் தற்கொலைகள் அதிகரிததுள்ளன. ராஜஸ்தானில் 186% அளவு உயர்ந்துள்ளது. ஆனால், இதே ஐந்தாண்டு காலகட்டத்தில் மேற்குவங்கத்தில் 76% அளவுக்கு மாணவர் தற்கொலைகள் குறைந்துள்ளன.

குறிப்பாக, 15 வயது முதல் 24 வயதுள்ளவர்களில் ஏழு பேரில் ஒருவர் மனஅழுத்தம், ஆர்வமின்மை ஆகியவற்றால் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 41% பேர் மட்டுமே சிகிச்சை எடுப்பதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது.

தென்னிந்திய மாநிலங்கள் ஆந்திரா, தெலங்கானா, கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு, மற்றும் யூனியன் பிரதேசங்களான புதுச்சேரி, அந்தமான் நிகோபார், மற்றும் லட்சத்தீவு ஆகியவற்றில் 29% அளவுக்குத் தற்கொலைகள் பதிவாகியுள்ளதாக ஐசி3 நிறுவனத்தின் ஆய்வறிக்கை குறிப்பிடுகிறது.

உலக சுகாதார அமைப்பின் தகவலின்படி, ஒவ்வோர் ஆண்டும் ஏறக்குறைய 7 லட்சம் பேர் தற்கொலை செய்துகொள்கிறார்கள். இதில், 15—29 வயதுடையவர்களின் மரணத்திற்கு 4—வது முக்கிய காரணமாக தற்கொலை உள்ளது.

### காரணம் என்ன?

தேர்வுகளில் சிறப்பாகச் செயல்படாமல் இருப்பது, மதிப்பெண் குறைவு, குடும்பம் மற்றும் ஆசிரியர்கள் தரும் அழுத்தம், பாடப்பிரிவுகளைத் தேர்வு செய்வதில் குழப்பம், கல்வி நிறுவனங்களில் போதிய கவுன்சிலிங் கிடைக்காதது, கல்வி நிறுவனங்களின் உள்கட்டமைப்புக் குறைபாடு போன்றவை தற்கொலைக்கு காரணங்களாக உள்ளதாக ஐசி3 அமைப்பு தெரிவிக்கிறது.

இதுதவிர, ராகிங், மற்றும் மாணவரின் நன் மதிப்பைக் குலைக்கும் செயல்கள், சாதிரீதியான பாகுபாடு, இனப்பாகுபாடு, பாலினம், மற்றும் வர்க்கம் சார்ந்த பிரச்னைகள், நிதிப் பிரச்னை, கூட்டுக் குடும்பமாக இல்லாததால் போதிய ஆதரவின்மை, வேறுபடுத்திப் பேசுவது, மாணவர்—பெற்றோர்—ஆசிரியர் இடையே தகவல் பரிமாற்றம் குறைவு போன்றவற்றையும் அந்நிறுவனம் பட்டியலிட்டுள்ளது.

இதுகுறித்து பேசிய கல்வியாளர் நெடுஞ்செழியன், "பிள்ளைகளின் கல்விக்கு பெற்றோர் லட்சக்கணக்கில் பணத்தைச் செலவிடுகின்றனர். ஆனால், அந்தப் பிள்ளை படிக்காமல் போகும் போது பிரச்னை ஏற்படுகிறது. இதில், பெண் குழந்தைகள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். கூட்டுக் குடும்பங்களில் வசித்தால் தாத்தா, பாட்டியிடம் குறைகளைக் கூற வாய்ப்புகள் அதிகம். தனிக்குடும்பங்களில் அதற்கான வாய்ப்புகள் குறைவாக இருப்பதால் தற்கொலைகள் அதிகரிக்கின்றன" என்கிறார்.

மேலும் பேசிய அவர், "மகாராஷ்ட்ரா, மத்திய பிரதேசம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் ஏராளமான பயிற்சி மையங்கள் உள்ளன. இவை வகுப்பறைகளை விடவும் கூடுதல் மன அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன. வகுப்பறைகளில் பாடங்களுடன் நுழைவுத்தேர்வுகளுக்கான பயிற்சிகளும் நடத்தப்படுகின்றன. இதனால் வெளி உலகை பயத்துடன் பார்க்கும் சூழலுக்கு மாணவர்கள் தள்ளப்படுகின்றனர்" என்கிறார் அவர்.

மேலும், "சொல்லப்போனால், பெற்றோருக்குத் தெரியாமலேயே குழந்தைகள் பாதிப்படைகின்றனர். பத்தாம் வகுப்புக்குள் நுழைந்துவிட்டாலே தங்கள் குழந்தையைக் குடும்ப நிகழ்ச்சிகளுக்குக்கூடப் பெற்றோர் கூட்டிச் செல்வதில்லை. ஓர் ஆசிரியர் பாலியல் குற்றச்சாட்டில் பணியில் இருந்து நீக்கப்பட்டால் அவர் வேறு ஒரு பள்ளி அல்லது கல்லூரியில் சேர்ந்து அதே தவறைச் செய்கிறார்" என்கிறார் அவர்.

"அவர் ஏன் வேலையில் இருந்து நீக்கப்பட்டார் என்ற விவரத்தைச் சொல்வதில்லை. இவரால் மாணவிகள் மீண்டும் பாதிக்கப்பட்டாலும் நிரந்தர தீர்வு கிடைப்பதில்லை" என்கிறார்.

### பெண்களைவிட ஆண்கள் தற்கொலை அதிகம்

பெண்கள் அதிகம் பாதிப்படைவதாகக் கல்வியாளர் நெடுஞ்செழியன் குறிப்பிட்டாலும், ஆண் மாணவர்களே அதிகளவு தற்கொலை செய்து கொள்வதாக ஐசி3 வெளியிட்ட ஆய்வறிக்கை கூறுகிறது.

கடந்த 2021—ஆம் ஆண்டில் மாணவர் தற்கொலைகளில் 57% பேர் ஆண்கள் என தெரிய வந்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் ஆண் மாணவர்கள் தற்கொலை செய்து கொள்வது 113% அதிகரித்துள்ளது. பெண் மாணவர்கள் தற்கொலை செய்து கொள்வது 79% அதிகரித்துள்ளது. இந்தப் பட்டியலில் திருநங்கைகள் தொடர்பான தரவுகள், ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளதாகவும் ஐசி3 நிறுவனம் தெரிவித்துள்ளது.

2002 முதல் 2006 வரை 15,568 மாணவர்களும், அதே ஆண்டில் 12,481 மாணவிகளும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். 2007 முதல் 2011 வரை 18,777 ஆண் மாணவர்களும் 15,367 பெண் மாணவர்களும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

2012 முதல் 2016 வரையில் 21,901 ஆண் மாணவர்களும் 19,655 பெண் மாணவர்களும் தற்கொலை செய்துள்ளனர். 2017 முதல் 2021 வரையில் 30,488 (39%) ஆண் மாணவர்களும் 25,525 (30%) பெண் மாணவர்களும் தற்கொலை செய்துள்ளனர்.





இதுகுறித்துப் பேசிய என்கிறார் டாக்டர் மோகன வெங்கடாசலபதி, "படிப்பைத் தேர்வு செய்வதில் உள்ள குழப்பம், அவர்கள் விரும்பிய படிப்பு கிடைக்காதபோது, அதில் ஆர்வம் செலுத்த முடிவதில்லை. தவிர, மாணவர்கள் மத்தியில் போதைப் பழக்கம் அதிகரித்துள்ளதும் முக்கியக் காரணம். இதனால் மனப்பிறழ்வு அல்லது மனச்சோர்வு ஏற்பட்டு திறமையற்ற இளைஞராக மாறிவிடுகிறார். அது தற்கொலை எண்ணத்தைத் தூண்டுகிறது. தற்கொலைகளில் ஆண்களின் எண்ணிக்கை அதிகரிக்க இதுவும் ஒரு காரணம்" என்கிறார்.

தொடர்ந்து, தற்கொலை எண்ணத்தில் உள்ள மாணவர்களைக் கண்டறிந்து அவர்களைக் குணப்படுத்தும் வழிமுறைகளை பட்டியலிட்டார்.

"ஒரு மாணவர் தற்கொலை எண்ணத்தில் இருந்தால், 'நான் எதற்காக வாழ வேண்டும்?' என நண்பர்களிடம் கூறுவார். எஸ்.எஸ்.எஸ் அல்லது வாட்ஸ்ஆப் மூலமாக இதைப் பற்றி தகவல் அனுப்புவார். தூக்க மாத்திரைகளை அருகில் வைத்துக் கொள்வது அல்லது தற்கொலை தொடர்பான வீடியோக்களை பார்ப்பது என செயல்படுவார். இதை சாதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. அப்போதே அவரை முழு உளவியல் பரிசோதனைக்கு ஆட்படுத்த வேண்டும்" என்கிறார் அவர்.

மேலும், "தற்கொலை தொடர்பாக அவர்கள் சொல்லும் சிறிய சமிக்ஞைகளை எடுத்துக் கொண்டு தற்கொலை தடுப்பு மையங்களை நாட வேண்டும். ஒரு பிரச்னையைத் தெளிவாக ஆராய்ந்து தீர்வு சொன்னாலே பாதிப் பிரச்னை தீர்ந்துவிடும் என மனநல மருத்துவம் கூறுகிறது. இது ஒரு பிரச்னையே அல்ல என அவர்களுக்குப் புரிய வைப்பது தற்கொலைகளை தடுக்கும்," என்கிறார் டாக்டர் மோகன வெங்கடாசலபதி.

இதே தீர்வுகளை ஐசி3 தொண்டு நிறுவனம் வெளியிட்ட ஆய்வறிக்கையும் முன்வைக்கிறது. அவை:

**பள்ளிகளிலேயே மாணவர்களின் தற் கொலை எண்ணங்களைத் தடுக்கும் வகையில் செயல்படுவது**

**பாடப்பிரிவுகளை தேர்வு செய்வது முதல் பல்வேறு நிலைகளில் மாணவர்களின் விருப் பத்தை அறிவது**

**மாணவர்களுக்கு ஆதரவான சூழலை உருவாக்குவது**

**பிரச்னைகளை முன்கூட்டியே அறிந்து சரியான நேரத்தில் தீர்வு சொல்வது**

**பள்ளிகளில் மாணவர் தற்கொலை எண்ணத்தை தடுக்கும் வகையில் உரிய பயிற்சி கொடுப்பது**

அதேநேரம், இந்த விவகாரத்தில் கீழ்ப்பாக்கம் அரசு மனநல மையத்தின் இயக்குநர் மீ.மாலையப்பனின் கருத்து வேறாக உள்ளது.

"கல்வியின் மூலம் மனஅழுத்தம் வருவது என்பது இந்தியா முழுவதும் உள்ள பிரச்னைகள் தான். சில மாநிலங்களில் மட்டும் தற்கொலைகள் அதிகமாக வேறு என்னென்ன காரணங்கள் உள்ளன என்பதை ஆராய வேண்டும்.பொதுவாக, தமிழ்நாட்டு மாணவர்களிடம் தற்கொலை எண்ணம் சற்று அதிகமாகவே உள்ளது. அதற்கு படிப்பு மட்டும் காரணம் அல்ல. இங்குள்ள மக்களிடம் தற்கொலை எண்ணம் அதிகமாக வேரூன்ற கலாசாரம் முக்கிய காரணமாக உள்ளது," என்கிறார்.

உதாரணமாக, வீட்டில் சாதாரண சண்டை வந்தாலே, 'செத்துப் போ' எனக் கூறுவது இயல்பாக உள்ளது. எதாவது ஒரு பிரச்னை வரும்போது அதற்கான தீர்வாக தற்கொலையை பார்ப்பது தான் காரணம். பிற சமூகங்களில் இது பெரிதாக இல்லை," என்கிறார் மீ.மாலையப்பன்.

### 'மனம்' திட்டம், மனநலத் தூதுவர்

இது குறித்து தொடர்ந்து பேசினார் மாலையப்பன்.



"இதைப் போக்கும் வகையில் பள்ளி, கல்லூரிகளில் மாதம்தோறும் மூன்று வகையான மனநல நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. மாவட்ட மனநல மருத்துவர்கள் இதற்கான பணிகளில் ஈடுபடுகின்றனர். மாணவர் தற்கொலையைத் தடுக்க ஆசிரியர்களுக்கு சொல்லிக் கொடுப்பது முக்கியமான பணியாக உள்ளது" என்கிறார்.

"மனம்' என்ற திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. ஒவ்வொரு பள்ளியிலும் 20 மாணவர்களைத் தேர்வு செய்கிறோம். அவர்கள், சக மாணவர்களில் யாராவது மனநல பிரச்னையில் இருப்பதைக் கண்டறிந்து அவர்களை கவுன்சலிங்குக்கு கொண்டு வருவார்கள்.

"இதற்குப் பாலமாக அதே மாணவர்களில் ஒருவர் மனநல தூதுவராக (Fear Ambassador) நியமிக்கப்பட்டுள்ளார். மற்றவர்களிடம் கூறுவதைவிட சக மாணவர் என்றால் மனம் திறந்து பேசுவதற்கான வாய்ப்புகள் அதிகம்," என்கிறார் அவர்.

"பாடத்திட்டச் சுமை உள்பட மாணவர்கள் மத்தியில் ஏற்படும் தற்கொலை எண்ணங்களைத் தவிர்ப்பதற்கு 'மனம்' போன்ற திட்டங்கள் முக்கியமானதாக உள்ளது. பள்ளி, கல்லூரிகள் தொடர்ந்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தும் போது தற்கொலைகளின் எண்ணிக்கை பெருமளவு குறையும்" என்கிறார்.

"மாணவர்களிடையே ஏற்படும் தற்கொலை எண்ணத்தைப் போக்கும் வகையில் பள்ளிகளில் கவுன்சிலிங் கொடுக்கப்பட்டு வருகிறது. அதற்கென ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்" என குறிப்பிட்டார், பள்ளிக்கல்வித்துறைச் செயலர் மதுமதி ஐ.ஏ.எஸ்.

மனநலம் சார்ந்த பிரச்னைகளை மருந்துகள் மற்றும் சிகிச்சை மூலம் எளிதில் குணப்படுத்தலாம். இதற்கான உதவி எண்களில் தொடர்பு கொண்டு நிவாரணம் பெறலாம்.

சினேகா தற்கொலை தடுப்பு உதவி மையம் : 044—2464000 (24 மணி நேரம்)

மாநில தற்கொலை தடுப்பு உதவி மையம் : 104 (24 மணி நேரம்)

சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் ஹெல்ப்லைன் : 1800—599—0019

மரம் வளர்ப்போம்
மழை பெறுவோம்!

தற்போது தமிழ் சொல் மாத இதழை ஆன்லைனில் படிக்க...
Scan and Read
www.tamilsoul.com

Published and Printed by Karthikeyan P and Printed at Chennai Offset Printers, 19/1, 21/2, Kitabathkhan Bhadur Street, Ellies Road, Chennai-600 002 and Published at 13/25, 2nd Street, Sundharapuram, Puliyanthope, Chennai-600 012. Cell : 94444 01485 Editor: SRIDHAR